விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

VIJEAY Complex
www.vijeaycomplex.com

உங்கள் அனைத்து மங்கள நிகழ்வுகளையும் கொண்டாடி மகிழ்ந்திட எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
0033687713427
021 221 2899/077 723 0104/077 449 6386
No.199, Chundikuli - Columbuthural Road, Jaffna.
(6211)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 07 சனிக்கிழமை (20.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091

## கொரோனா 4 பெண்கள் உட்பட 6 பேர் பலி

(கொழும்பு)
கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 6 பேர் உயிரிழந்துள்ள தாக சுகாதார சேவை 19

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில்
## தமிழர்களின் நில ஆக்கிரமிப்பை ஆராயும் இணையவழி சர்வதேச மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்கள், வாழ்விடங்கள் ஆக் கிரமிப்பு செய்யப்படுகின்றமை தொடர்பாக ஆராயும் இணைய வழி சர்வதேச மாநாடு இன்று நடைபெறவுள்ளது.
இன்று 20ஆம் திகதி சனிக் கிழமை இலங்கை நேரம்மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரைசும்(Zoom) தொழில்நுட்பம் மூலம் 19

## இலங்கையில் மோசமடையும் மனித உரிமைகள்
# பொறுப்புக்கூறலுக்கு இராஜதந்திர நடவடிக்கை
## ஏனைய சர்வதேச நாடுகளுடன் களத்தில் இறங்கிய அமெரிக்கா



(ஜெனிவா)
இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகள் மோசமடைந்துவரும் நிலையில் இலங்கையை சர்வதேச பொறுப்புக்கூறலுக்கு நகர்த்துவதற்கு ஏனைய சர்வதேச நாடுகளுடன் இராஜதந்திர நடவடிக்கையில் இறங்கு மாறு அமெரிக்காவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
(03ஆம் பக்கம் பார்க்க)

## அரச பேருந்தில் வயோதிபர் திடீர் மரணம்

(மன்னார்)
மன்னாரில் இருந்து கண்டி நோக்கி சென்ற இலங்கை அரச போக்குவரத்து சேவை பேருந்தில் பயணம் செய்த வயோதிபர் ஒருவர் திடீர் சுகயீனம் 19

## சட்டமா அதிபர் யாழுக்கு நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)
சட்ட மா அதிபர் 19

## யாழ்.பல்கலை மாணவர்கள், வியாபாரிகள் உட்பட 9 பேருக்கு வடக்கில் கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரி சோதனைகளில் வடக்கு மாகா ணத்தினைச் சேர்ந்த கொரோ னாத் தொற்றாளர்கள் 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.
யாழ்ப்பாணத்தில் தொற்றா ளர்கள் ஆறு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அவர்களில் இருவர் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள். அவர்கள் குரு நாகல், கம்பஹா மாவட்டங் களைச் சேர்ந்தவர்கள்.
யாழ்.நகர் நவீன சந்தைத் தொகுதியில் 19

## சர்வதேசத்திடம் நீதி கோரி மட்டக்களப்பில் பேரணி


12

## மரத்திலிருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு
### ஆட்டுக்கு குழை வெட்டுவதற்கு ஏறியபோது விபரீதம்

(யாழ்ப்பாணம்)
ஆட்டுக்கு குழை வெட்டுவதற் காக மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் அதிலி 19

## மனித உரிமைகளை பாதுகாத்தால் ஐ.நா நெருக்கடியிலிருந்து மீளலாம்
### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையில் இலங் கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி களிலிருந்து மீள்வதற் கான ஒரே வழி நாட் 19

## இலங்கை விவகாரம்
## ஜெனிவாவில் திங்கள் பொது வாக்கெடுப்பு

(ஜெனிவா)
இலங்கை தொடர்பான ஜெனிவா தீர்மானம் மீது எதிர்வரும் 22 19

## மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோருக்கு எதிராக நடவடிக்கை
பிரித்தானியா ஆலோசனை
5ஆம் பக்கம் பார்க்க

48 வயதுடைய பெண்
## மன்னார் - தனுஷ்கோடி கடலை நீந்தி சாதனை



(ராமேஸ்வரம்)
தெலுங் கானா வைச் சேர்ந்த 48 19

# மணிவிழா வாழ்த்து




திரு. சின்னத்தம்பி
**சுப்பிரமணியேஸ்வரன்**
( கோட்டக்கல்விப் பணிப்பாளர், புதுக்குடியிருப்பு )

ஆறாண்டு காலம் கோட்டத்தில் அதிகாரியாக இருந்து
நூற்றாண்டு பணியை ஆறாண்டில் செய்து முடித்த
ஈறான அவர் சேவைக்கு இதயம் பூரித்த வாழ்த்துக்கள்.

அதிபர்கள்
புதுக்குடியிருப்பு கல்விக்கோட்டம்.

(C-1748)

## மணமகன் தேவை

யாழிந்து கொளரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (6118)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# இனிய பிறந்தநாள் வாழ்த்துகளும் சேவை நலன் பாராட்டும்




திரு. சின்னத்தம்பி
**சுப்பிரமணியேஸ்வரன்**
( கோட்டக்கல்விப் பணிப்பாளர், புதுக்குடியிருப்பு )
( 20.03.2021 )

இன்றைய நாளில் தனது பிறந்தநாளை கொண்டாடும் எம் இனிய ஆசானை சீரும் சிறப்பும் பெற வாழ்த்துவதுடன் அவரது சேவையையும் பாராட்டி நிற்கின்றோம்.

என்றும் தங்கள் மாணவர்களாய்
திரு. திருமதி ஸ்ரீகாந்

(C-1763)

## என்றும் மறக்க முடியாத நினைவுடன்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**ஈஸ்வரன் கோகுலன்**
பிறப்பு 20.02.1997
இறப்பு 03.04.2017
திதி : 20.03.2021



19ஆம் ஆண்டு
**சுந்தரசிங்கம் ஈஸ்வரன்**
பிறப்பு : 07.03.1959
இறப்பு : 06.01.2002
திதி : 06.01.2021



24ஆம் ஆண்டு
**ஈஸ்வரன் கவிராஜ்**
பிறப்பு : 10.03.1995
இறப்பு : 24.10.1997
திதி : 13.11.2020



20ஆம் ஆண்டு
**ஈஸ்வரன் குருபரன்**
பிறப்பு : 11.07.1998
இறப்பு : 10.12.2001
திதி : 10.12.2020

அன்பு மகனே கோகுலா!
காலை கண் விழித்த நொடி முதல்
உன் ஞாபகங்கள்!
உன் நினைவுகள் என் மனதில் அழியா
சுவடாய் பொதிந்துள்ளன!
நீ இல்லா வாழ்க்கை எனக்கு நரகமாய்
உள்ளது கோகுலா!
உன்னை பிரிந்த நாள் முதல் இன்றுவரை
உன் அன்பிற்கு இணையாருமில்லை!
உன் பாசத்திற்கு ஏங்கும் எனது ஏக்கங்கள்
உணர முடியாத வலியாய் என்னை கொல்கிறது!
இன்றோ உனது நினைவு நாள் ஆனால்
என் மனம் நினைவஞ்சலி செலுத்த மறுக்கிறது!
நீ வேண்டும் உன்னுடன் வாழ்ந்த அந்த
பொக்கிஷமான நாட்கள் மீண்டும் வேண்டும்!
திரும்பி என்னிடம் வாங்கோ செல்லங்களே!!!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல எம் குல தெய்வமாகிய
காசிப் பூதராயப் பெருமான்
பெருப்பரப்பு பிள்ளையாரை வேண்டி
பிரார்த்திக்கின்றேன்.

(6213)

என்றும் உங்கள் நால்வரின்
நினைவுடன் வாழும்
**உங்கள் அம்மா**

077 699 4096

# தமிழினத்திற்கு இழைக்கப்பட்டது கொடூரமே சாட்சிகளை திரட்டும் பொறிமுறைக்கு அழைப்பு

(லண்டன்)

**இலங்கையில் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்குரிய சாட்சிகளை திரட்டும் பொறிமுறைக்கு அழைப்பு விடுத்தார் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் சிபோன் மெக்டோக்.**

பிரித்தானிய பாராளுமன்றில் நேற்று விவாதத்தை ஆரம்பித்த தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சிபோன் மெக்டோக், இலங்கை அரசாங்கம் தமிழினத்துக்கு இழைத்த கொடூரங்களை பட்டியலிட்டு உரையாற்றியதுடன், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புகூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயத்தை பிரித்தானியா கைவிட முடியாதெனவும் வலியுறுத்தியிருந்தார்.

இதனடிப்படையில் தற்போது இலங்கை தொடர்பாக அடுத்தவாரம் ஐ.நா.மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்படும் தீர்மானம் தொடர்பிலும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் இந்த விவாதத்தில் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் பங்கெடுக்காதமைக்கு அவர் கண்டனம் தெரிவித்திருந்தார்.

ஐ.நா.மனித உரிமை பேரவையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கை தொடர்பான தீர்மானம் வாக்களிப்புக்கு வரலாம் என எதிர் பார்க்கப்படும் நிலையில் நேற்று இந்த விவாதம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## கொரோனாவை விடக் கொடியது மாகாணசபை முறைமை என்கிறார் தேரர்

**மாகாண சபைக்கு எதிரான போராட்டத்திற்கு தயாராம்**

(கொழும்பு)

மாகாணசபை முறைமை என்பது கொரோனா வைரஸை விடவும் பாரதூரமானதாகும்.

இலங்கைக்கு மாகாண சபை முறைமை பொருத்த மற்றது என்ற நிலைப்பாட்டில் மகா சங்கத்தினர் இன்றும் உறுதியாகவுள்ளனர் என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

இலங்கையில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போதே நாம் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தோம்.

இலங்கையைப் போன்ற சிறிய நாட்டுக்கு மாகாண சபை முறைமை பொருத்தமானதாக இருக்காது. எனவே மாகாண சபை முறைமை மீண்டும் ஆரம்பிக்கப்படுமாயின் அது பாரிய அழிவாகும்.

எனினும் அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தொட ர்பில் கருத்துக்களை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி மாகாண சபைக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றார். (நி-4)

## கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் உடனடியாக நேர்முகத் தேர்வு



(கொழும்பு)

நாட்டில் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாக உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சுமார் 2000 வெற்றிடங்கள் நிலவுவதாக உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எச்.எச்.எம். சித்ராநந்த தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக மீண்டும் நேர்முகத் தேர்வு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)


மணிவிழா நாயகனை மனதார
Congratulations!
வாழ்த்துகின்றோம்
திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியேஸ்வரன்



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின்
முன்னாள் முதல்வனே
அகவை அறுபது உமது வயதல்ல
ஆளுமை மிக்க துடிப்பும்
இளமையும் அறிவொளி
வீசும் பார்வை இவையனைத்தும்
அகவையில் அரைவாசி பங்கை
மறைத்திடும்
மாணவர் ஆற்றுப்படுத்தலின்
தந்தையாய்
கடமையின் ஓர் வீரனாய்
கல்லூரியின் உயர்ச்சிக்கோர்
தலைவனாய் வாழ்நாளில் செய்தவற்றை
இச்சமூகம் மறந்திட முடியுமா?
சேவையின் ஓய்வுபெற்ற
போதும்-உம் வாழ்நாட்கள் இனிதே
அமைந்து மேலும்
சகல வளங்களும் பெற்று பல்லாண்டு
காலம் நோய் நொடி இன்றி இல்லம்
சிறக்க இன்பமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.
(C-1761)
வாழ்த்துவோர்:
2010 A/L மாணவர்கள்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.



மணிவிழா நாயகனை மனதார
Congratulations!
வாழ்த்துகின்றோம்
திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியேஸ்வரன்



ஏணிப்படியாய் எம் ஏற்றமிகு
வாழ்விற்கு உதவிய
எம் அருமை ஆசானே
தோல்விகளைப்
பாடமாக்கி
வெற்றிக்கு வித்திட்டீர்
நாம் தலை நிமிர்ந்து வாழ்ந்திட
திடமான நம்பிக்கை தந்தீர்
மணிவிழாக் காணும்
நீங்கள் நீண்ட தேக சுகத்துடன்
கல்விப் பணியாற்ற
இறையருள் வேண்டி
வாழ்த்துகிறோம்.
(C-1761)
வாழ்த்துவோர்:
2013 உயர்தர மாணவர்கள்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூ

# மணிவிழா நாயகனை வாழ்த்தி பாராட்டுகின்றோம்

திருவாளர்
## சி. சுப்பிரமணியேஸ்வரன்




எமது பாடசாலைக்கு ஆசிரியராக
முதல் நியமனம் பெற்று வந்து
எமது அறிவுப்பசிக்கு தீனி போட்டு
கற்றலை தூண்டி விட்ட பெருமகானை
போற்றுகின்றோம். கல்வியையும்
ஒழுக்கத்தையும் எமக்கு வித்திட்டவர்.
நீங்கள் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட
பார்வையும் கம்பீரக்குரலும்
இம்மியளவும் குறையாது இன்றும்
காண்கின்றோம். நீங்கள்
செதுக்கிவிட்டவர்கள் சிற்பிகளாக எங்கும்
வியாபித்திருகின்றோம்.
என்றென்றும் உங்கள் மாணவர்கள்
நாம் என்பதில் பெருமை கொள்கின்றோம்.
உங்கள் ஓய்வு காலம் சிறப்பாக
அமையட்டும். வாழ்த்துகள்
தொடரட்டும் உங்கள் பணி ...

(C-1754)

பாடசாலைச் சமூகம்
முமுள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## வீடு, காணி விற்பனைக்கு

1. நுணாவில் A9 வீதியோடு 12 பரப்புக் காணி.
2. கோப்பாய் இராச பாதை வீதியில் 7 பரப்புக் காணி.
3. யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் 3 மாடி கடை.
4. யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் 1½ பரப்புடன் கடை.

(6146)

தொடர்பு:-
077 275 7484, 077 104 8865


# அறிவித்தல்

## கறவை பசுக்கள் கொள்வனவுக்கான கேள்வி கோரல்

**2ஆம் மாடி, கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு சபை A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் இயங்கிவரும் வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் வடமாகாணத்தில் திருந்திய முறையில் பாற் பசுக்களை வளர்ப்போரிடம் இருந்து கீழ் குறிப்பிடும் தகதியுள்ள கறவை பசுக்களை பெறுவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

1. இனம் :- ஜேசி கலப்பு
2. வயது :- 2 - 4
3. சினைப்படுத்தப்பட்ட அல்லது பால் கறக்கும் கறவை பசு
4. நாள் ஒன்றுக்கு பால் உற்பத்தி 8 - 10 லீற்றர்
5. நோய் மற்றும் ஊனமுற்ற கால்நடையாக இருத்தலாகாது.

(C-1751)

மேற்கூறப்பட்டுள்ள தகைமையுடைய கறவை பசுக்களை விற்பனை செய்ய விரும்புவர்கள் எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தங்கள் விண்ணப் பங்களை 25.03.2021ஆம் திகதி நண்பகல் 12.00க்கு முன்னதாக கிடைக்க கூடிய வகையில் கடிதம் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சு.கணபதிப்பிள்ளை
தலைவர்,
வடமாகாண சி.க.கூ.ச.சம்மேளனம்.

தொலைபேசி
021 313 4680, 076 266 6619


# அகவை அறுபது காணும் மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



## திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியேஸ்வரன்

(ஆசிரியர் - மு/குமுழமுனை ம.வி)

(01.01.1988 - 31.01.1993)

20
03.2021

எண்ணிட இனிக்கும் இனிய நற்பண்பு மிக்கோரே!
கண்ணியம் கடமை பேணும் கவின்மிகு ஆசானே!
சிங்கம்போல் நடையுடன் சிறப்புற கல்வியூட்டி
மாணவர் விரும்பும் நல் மனத்தினை உடையவரே!
ஒழுக்கத்தில் கடமை பேணி வழுவிலா பண்பாளனாகி
வள்ளுவன் குறளை ஒத்தாய் வழுவிலாச் சேவையினால்
பாங்குடன் மறவோம் நாம் உம் பழுதிலா சேவைதனை
வாழ்க நீரும் வளமாக மகவாய் பணிந்து வாழ்த்துகிறோம்.

(C-1757)

பழைய மாணவர்களும் பாடசாலைச் சமூகமும்
மு/குமுழமுனை ம.வி

# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பலருக்கு எதிராக நடவடிக்கை-பிரிட்டன்

(லண்டன்)

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட மேலும் பலருக்கு எதிராக தடைகளை விதிப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக பிரிட்டன் அமைச்சர் நைஜல் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது நைஜல் அடம்ஸ் மேலும் கூறியுள்ளதாவது.

"பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியன நிகழ்ச்சி நிரலில் மிகவும் முக்கியம் வாய்ந்த விடயங்களாகக் காணப்பட வேண்டும்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பொறுப்புக் கூறல் மிகவும் அவசியமானதொன்றாகும்.

இதேவேளை உலக நாடுகளில் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சில தடைகளை விதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்நிலையில் மேலும் பலருக்குத் தடைகளை விதிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

இதேவேளை இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்காக பிரிட்டனில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவரின் முன்மொழிவுகளையும் நாங்கள் ஆதரிக்கின்றோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள், மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற தகவல் தொழில்நுட்பம், மனைப் பொருளியல் மற்றும் சித்திரப் பாடங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

අධ්‍යාපන අමාත්‍යාංශය, ශ්‍රී ලංකාව
கல்வி அமைச்சு, இலங்கை
MINISTRY OF EDUCATION, SRI LANKA

இந்தப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. விண்ணப்பதாரர்கள் **www.applications.donets.lk/exam** என்ற வலைத்தளத்தை பார்வையிட்டு விண்ணப்பிக்க முடியும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-4)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.திருமதி. **சின்னையா சிவசக்தி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.08.1935 | 01.03.2020 |

அன்னைமடி தவழ்ந்தே அவனியைத் தொட்டோம்!
அவள்முகம் கண்டே அசைந்தன உதடுகள்
என்ன நிலை வந்தாலும் எங்களுக்காய் வாழ்ந்தவளே!
என்றுமுன் பிரிவிற்கு ஏதம்மா காலஎல்லை!

ஆரணி முள்ளாவத்தை,
அல்வாய்.

குடும்பத்தினர்.

(C-1744)

# JOB வேலை வாய்ப்பு

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

### நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

இப் பிரதேச சபையின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கு தகமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்:**

01. இப்பதவி முற்றிலும் தற்காலிகமானது.
02. இப்பதவிக்கு குறித்துரைக்கப்பட்ட வேதனமோ அல்லது படிகளோ கிடையாது.

**தகைமைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட **வதிவிடச் சான்றிதழ்** மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் **வாக்காளர் பட்டியலின்** மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
02. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று (31.03.2021) 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்குமேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லைக்குள் அப்பாற்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
04. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
05. ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
06. பாதுகாப்பு வைப்பாக ரூபா 5000.00 செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை:**

01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலைமனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

01. கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விடுமுறை நாட்கள் தவிர்ந்த அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணி வரை ரூபா.50/- இனைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்திற்குப் பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
06. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுத் திகதியான 31.03.2021 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரேதடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:- கிளிநகரம், கணேசபுரம், உதயநகர், கிருஸ்ணபுரம், பாரதிபுரம், திருவையாறு, கனகாம்பிகைக்குளம் ஆகிய வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**வேதனம்**

அறவிடப்படும் ஆதனவரி வருமான நிலுவைத் தொகையின் **10%** தரகுப்பணமாக வழங்கப்படும்.

(C-1755)

**திரு.கா.சண்முகதாசன்,**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த முயற்சி எடுக்கப்படும்

## அமைச்சர் அளுத்கமகே

(சாவகச்சேரி)

வடமாகாண சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டும் என கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவிடம் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்ட கலந்துரையாடலின் போதே குறித்த கோரிக்கை அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் சுற்றுலாத்துறைக்கு உகந்த பல இடங்கள் இருந்தும் அவை இன்றுவரை பயன்பாட்டில் இல்லாமல் பிரயோசனமற்றுக் காணப்படுகின்றன.

வடக்கில் கடல் சார்ந்த பிரதேசங்களை அண்மித்து சுற்றுலாத்துறையை மெருகேற்ற முடியும். அத்துடன் இங்குள்ள இளைஞர்-யுவதிகளுக்கு உரிய பயிற்சியளிப்பதன் மூலம் அவர்களுக்கான தொழில் வாய்ப்பினையும் சுற்றுலாத் துறை மூலமாக பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு அமைச்சர் அளுத்கமகே வடக்கில் விமான நிலையம் காணப்படுவதால் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும் எனவும் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். (5-4-30)

# பின்லா செயற்றிட்டம் சாவகச்சேரிக்கு வரப்பிரசாதம்

## பிரதேச செயலாளர்

(சாவகச்சேரி)

**கழிவு முகாமைத்துவத்தை பேணுவதற்கான பின்லா செயற்றிட்டம் சாவகச்சேரிக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய வரப்பிரசாதம் என தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி. உஷா சுபலிங்கம் தெரிவித்துள்ளார்.**



அண்மையில் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேள்ட்விஷன். நிறுவனம் நீண்டகாலமாக நலிவுற்ற மக்களின் வாழ்வாதார மேம்பாடு, சிறுவர் பாதுகாப்பு உள்ளிட்ட சமூக சேவை வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

வேள்ட்விஷன் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பின்லா திட்டம் சாவதச்சேரி நகரசபை எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படுவது மிகப்பெரிய வரப்பிரசாதம்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளால் கடல்வாழ், தரைவாழ் உயிரினங்கள் பாதிப்படைகின்றன.

பின்லா செயற்றிட்டம் மூலம் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி சூழலை பாதுகாக்க முடிவதுடன், இதனூடாக சமூகத்தில் வறுமை நிலையில் காணப்படும் ஒரு பகுதியினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும்.

இந்த இரண்டும் வெற்றியடைவதன் மூலம் இந்த பின்லா திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த முடியும். வளங்களை (கழிவுகளை) சேகரிப்பவர்களாக குறித்த திட்டம் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள் ஏனைய பிரதேசங்களுக்குச் சென்றும் கழிவுகளைச் சேகரித்து கழிவு முகாமைத்துவத்தை பேணுவதுடன தங்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.(5-4-30)

# கண் பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் சுதுமலை அம்மன் அறக்கட்டளை நிதியமும் இணைந்து கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும் கண்ணுக்கு முதலிடமளிக்கும் சேவையில் கண் பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும் நாளை 21 ஆம் திகதி ஞாயிறு காலை 7 மணிமுதல் சுதுமலை கிராம அபிவிருத்தி மண்டபத்தில் (சுதுமலை அம்மன் கோவிலடி) இடம்பெறவுள்ளது.

எனவே மக்களை தற்போதைய சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக கலந்து கொள்ளுமாறு நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (5-4-8)




# கிளிநொச்சியில் 4500 குடும்பங்கள் காணி அற்றவர்களாக உள்ளனர்

## மக்கள் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டு



(சாவகச்சேரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 4500 குடும்பங்கள் காணி இல்லாதவர்களாகக் காணப்படுவதாக அண்மையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கிராமிய பொருளாதார மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலின் போது மக்கள் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 4500 குடும்பங்கள் காணி அற்ற குடும்பங்களாக காணப்படும் நிலையில் பளைப் பிரதேசத்தில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளை நாட்டில் ஏனைய பிரதேசங்களில் இருந்து வருவோர் சுவீகரிக்கும் நிலைமை காணப் படுகிறது. எனவே கிளிநொச்சி மாவட் டத்தில் காணி இல்லாத குடும்பங்களுக்கும் இளைய தொழில் முயற்சியாளர்களுக்கும் குறித்த காணிகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கையை அடுத்து மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் பளையில் உள்ள குறித்த காணிகளை வடக்கு மாகாணத்தில் காணித் தேவைப்பாடுள்ள மக்களுக்கு மாத்திரமே வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தார்.

அத்துடன் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வடக்கில் உள்ளவர்களுக்கு பளையில் உள்ள காணிகளை முதலில் வழங்குங்கள்.

இங்குள்ளவர்களின் காணித் தேவை பூர்த்தியான பின்னரே ஏனைய பிரதேசத்தவர்கள் பற்றி சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். (5-4-30)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இருபாலை வேளாதோப்பு ஸ்ரீமதுரை மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபை தெரிவும் நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய வீதியில் உள்ள இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் திருவிழா உபயகாரர்கள், பக்தர்கள் அனைவரையும் சுகாதார விதிமுறைகளைப் பேணி கலந்து கொள்ளுமாறு நிர்வாக சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (5-4)

# ஆன்மிக சொற்பொழிவு

(குப்பிழான்)

கட்டுவன் சரஸ்வதி இல்லம் ரமணாலயத்தில் முதியோருக்கான ஆன்மிக ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் மேற்படி இல்லப் பிரார்த்தனை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் இளம் சைவப்புலவர் க.கைலநாதன் "இனிய வாழ்வுக்கு ஆன்மிகம்" எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (5-4-18)



அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒருவர் எண்பதாயிரம் ரூபாய் பெறுமதியான காலணிகள் அவரின் தந்தையால் மாணவர்களுக்காக அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வு அதிபர் உ.முரளி தலைமையில் இடம்பெற்றது.

(படம்:- மகாலிங்கம்)

# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்டே தீருவோம்-வி.கே.சிங் உறுதி

(சென்னை)

**கச்சதீவை மீண்டும் இலங்கையிடமிருந்து மீட்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்து துறை இணை அமைச்சர் வி.கே. சிங் தெரிவித்துள்ளார்.**



இராமநாதபுரத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன், இராமநாதபுரத்தில் விமான நிலையம் அமைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விடயத்தில் தமிழகத்திற்கு சாதகமான நிலையே ஏற்படும்.

இலங்கை அரசுடன் நமது வெளியுறவுத்துறை, வேளாண்மைத் துறை மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர்கள் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

இலங்கை அரசால் பறி முதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் அனைத்தும் திரும்பப் பெறப் பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆழ்கடல் மீன்பிடி திட்டமும், தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையிலேயே செயற்படுத்தப் பட்டுவருகிறது என அவர் தெரிவித்தார். (நி-4)

# பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அரிசி பறிமுதல் செய்யப்படும்

(கொழும்பு)

அரிசி ஆலை உரிமையாளர் அல்லது உற்பத்தியாளர் அல்லாத ஒரு இடைத்தரகரிடம் அரிசி கையிருப்பில் வைத்திருப்பதாக தகவல் கிடைத்தால் குறித்த அரிசி பங்குகளை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பான உறுதியான தகவல்கள் இருப்பின் நுகர்வோர் விவகார ஆணையத்திற்கு அறிவிக்குமாறும் தெரிவித்த அமைச்சர், அவ்வாறு பதுக்கி வைத்திருக்கப்படும் அரிசி பங்குகள் பறிமுதல் செய்யப் படும் என்று தெரிவித்தார்.

ஜா-எல பகுதியில் அமைக்கப் பட்டுள்ள ச.தோ.ச. விற்பனை நிலையை திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (நி-4)


## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்குமான வரன்கள் உள்நாடு, வெளிநாடு, அரச உத்தியோகம், அரச சார்பற்றவர்கள் உட்பட எல்லாவித மணமக்கள் எம்மிடம் உண்டு. எல்லா மணமகள், மணமகனாயினும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். (6224)

தொடர்பு நல்லூர் கந்தன் திருமண சேவை
வி.ஜெயந்தி: தொ.இல. 077 973 3183


## ஏல விற்பனை

எமது அலுவலகத்தில் பாவிக்கப்பட்ட தளபாடங்கள், கணனி உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் போன்ற பொருட்கள் 24.03.2021 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் எமது அலுவலகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலயக் கல்விப் பணிப்பாளர், (C-1760)
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## Invitation for Bids (IFB-2021/03)
### Department of Irrigation, Northern Provincial Council.

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் PSDG, Recurrent நிதி மூலங்களின் 13 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இக் கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 18.03.2021 வெளிவந்த Daily News பத்திரிகை பக்கம் 33 இல் பார்வையிடவும்

(C-1759) நீர்ப்பாசனப் பணிப்பாளர்,வடக்கு மாகாணம்.


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 45 1/2 செவ் 12 சூரி 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L, பாதுகாவலர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்.
உள்நாடு மட்டும்
தொ.இ: B/11626

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 2 1/2 செவ்.சூரி 10 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L, சாரதி
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்.
உள்நாடு, வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்
தொ.இ: B/11628

பிறப்பு: 1988 றோமன் கத்தோலிக்கம்
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: செவ் 2 சூரி 7 இல்
தகைமை/தொழில்: Hotel Management
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்.
உள்நாடு மட்டும்
தொ.இ: B/11630

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 10 சூரி 9 இல் உயரம்: 172cm
தகைமை/தொழில்: O/L, கட்டப்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர்
எதிர்பார்ப்பு : நல்ல குணமுள்ள பொருத்தமானவரன். உள்நாடு மட்டும்
தொ.இ: B/11631

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 21 செவ் 1 சூரி 11 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS, MD மூட்டுவாத நிபுணர்
எதிர்பார்ப்பு: வைத்தியர் அல்லது உயர் தொழில். உள்நாடு மட்டும். வீடு உண்டு
தொ.இ: G/2493

பிறப்பு: 1975 இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா: 56 1/4 செவ் 10 சூரி 12 இல்
உயரம்: 150 cm
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும். அரச உத்தியோகம், வெளிநாடு வேண்டாம். சைவபோசனம். வீடு உண்டு.
தொ.இ: G/2525

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 56 1/4 செவ் 10 சூரி 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம். உள்நாடு மட்டும். சைவபோசனம்
தொ.இ: G/2528

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 46 1/2 செவ் 8 சூரி 7 இல் உயரம்: 5'
எதிர்பார்ப்பு: அரச, தனியார், ஆசிரியர், வங்கி, உள்நாடு, வெளிநாடு இரண்டும். வீடு உண்டு
தொ.இ: G/2532

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் **31.01.2020** இற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு கீழ்குறிப்பிடப்படும் திகதிவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் **03.04.2021** தொடக்கம் **11.04.2021** வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு, மல்லாவி | 01.04.2021 | 03.04.2021 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 02. | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 01.04.2021 | 03.04.2021 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 03. | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் | 01.04.2021 | 04.04.2021 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 04. | வவுனியா | 01.04.2021 | 04.04.2021 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 05. | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை | 08.04.2021 | 10.04.2021 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 06. | மன்னார், வங்காலை | 08.04.2021 | 10.04.2021 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 07. | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் 2ம்கிளை, ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கோப்பாய் | 08.04.2021 | 11.04.2021 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி.
(6223)

# நெல் உளரவிடும் தளங்கள் இல்லை விவசாயிகள் பெரும் கவலை

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் கல்விளான் குளம் பகுதியில் அறுவடை செய்யும் நெல்லை உலர விடுவதற்கு போதிய தளங்களின்மையால் வீதிகளில் நெல்லை உலர வைக்க வேண்டிய நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத்தின் கீழ் உள்ள பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற கல்விளான் குளத்தின் கீழ் 473 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் அறுவடை செய்கின்ற நெல்லை உலர வைப்பதற்கு தமது கிராமத்தில் போதிய தளங்கள் இல்லை எனவும் தமது கிராமத்தில் ஒரே ஒரு தளம் மாத்திரம் உள்ளதாகவும் இதில் 35 தொடக்கம் 40 மூட்டைவரையான நெல்லை இரண்டு நாட்களுக்கு உலரவிட வேண்டிய தேவை காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் நெல்லை ஒரே நேரத்தில் எல்லா விவசாயிகளும் அறுவடை செய்து வருவதால் விவசாயிகள் தங்களுடைய அறுவடை செய்யும் நெல்லை உலரவிட முடியாத நிலை உள்ளதால் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லை வீதிகளில் உலரவிட வேண்டியுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (5-4-315)




## ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல்செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. (5-4)

# சுற்றுலா நீதிமன்ற அமர்வுகள் இனி ஒவ்வொரு புதனும்

(முல்லைத்தீவு)

மாங்குளம் புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இதுவரை காலமும் ஒவ்வொரு மாதத்தின் 2 , 4 ஆம் வாரத்தின் புதன் கிழமைகளில் முல்லைத்தீவு மாவட்ட/நீதவான் நீதிமன்றத்தின் சுற்றுலா நீதிமன்ற அமர்வானது இடம்பெற்று வந்தது.

மேலும்நீதிச்சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பிரகாரம் மாதத்தின் அனைத்து புதன்கிழமைகளிலும் மாங்குளம், மல்லாவிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வழக்குகள் முல்லைத்தீவு மாவட்ட/ நீதவான் நீதிமன்றத்தின் சுற்றுலா நீதிமன்ற அமர்வுகள் நடைபெறும் எனவும் கடந்த புதன் கிழமை இச்சுற்றுலா அமர்வு ஆரம்பிக்கப்பட்டது எனவும் மாவட்ட/ நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5-4)



மன்னாரில் அமைக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் மன்னார் பிராந்திய உத்தி யோகபூர்வ இல்லம் நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர்கள், நீதிபதிகள், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்ஸி டி மேல் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜாவினால் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவிற்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

(படம்:-ஜோசப்நயன்)

# ஒருமாத காலமாக மாந்தை கிழக்கில் பேருந்து சேவை இடம்பெறவில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் நடைபெற்று வந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை கடந்த ஒரு மாத காலமாக நடைபெறவில்லை என பொதுமக்களினால் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகரில் இருந்து மாங்குளம், துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய இடங்களுக்கு காலையில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவை ஒரு மாத காலமாக நடைபெறாததன் காரணமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் இப்பகுதியின் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பெரும் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளையில் மாந்தை கிழக்கில் இருந்து காலை 5.30 மணிக்கு பயணிக்கத் தொடங்கும் தனியார் பேருந்து மாலையில் வருவதில்லை. இவ்விடயங்கள் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளரினால் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் மாந்தை கிழக்கிற்கான பேருந்து சேவை தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக கலந்து கொண்ட உத்தியோகத்தர், சாரதிகள், பேருந்துகளின் பற்றாக்குறைகள் காரணமாக மாந்தை கிழக்கிற்கான பேருந்து சேவை நடத்த முடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களுக்கான பேருந்து சேவை இடம்பெறாமையினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-4-350)

# சட்டவிரோதமான முறையில் தொழில் செய்வோரை வெளியேற்றவும்

## சமாசத் தலைவர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு நாயாறில் சட்டவிரோத தொழிலுக்கான வாடிகளை அகற்றாமல் பூர்வீகமான எமது வாடிகளைப் பதிவு செய்யுங்கள் என்பதன் உள்நோக்கம் என்ன என முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாயாறுப் பகுதியில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கடற்கரையோர பாதுகாப்புத் திணைக்களம், பிரதேச சபை என்பவற்றின் அனுமதி இல்லாமல் வாடிகளை அமைத்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர் என கூட்டத்தில் தெரிவித்தோம். நேற்று முன்தினம் முல்லைத்தீவு கடற்கரைக்கு வருகை தந்த கடற்கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தினர், பிரதேச சபையின் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் பூர்வீகமாக நாம் தொழில் செய்யும் வாடிகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் பதிவு செய்யுங்கள் என கட்டளை பிறப்பித்துள்ளனர்.

நாம் சட்டங்களை மதித்தே தொழில் செய்து வருகின்றோம். பதிவற்ற வாடிகள் பதிவு செய்ய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் மேற்படி திணைக்களங்களின் அதிகாரிகள் நாயாறில் சட்டவிரோத தொழிலை மேற்கொள்வதற்காக அனுமதியற்ற முறையில் வாடிகளை அமைத்து தொழில் செய்து வருகின்றமையை கடற்கரையோர பாதுகாப்புத் திணைக்களம், பிரதேச சபை ஏன் கண்டு கொள்வதில்லை.

. சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை. கடந்த பத்தாண்டுகளாக தொடர்கின்ற இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ன என்பது தெரியாது முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பெரும் இழப்புகளுடன் தொழில் செய்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (5-4-350)

# இந்திய மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க அவர்களை பிடித்து வாருங்கள்

## கடற்றொழில் அமைச்சர் கட்டளை

(குருமன்காடு)

இந்திய மீன்வர்களின் பிரச்சினையை உடனடியாக தடுக்க வேண்டுமானால் நீங்கள் சென்று அவர்களை பிடித்து வாருங்கள். நான் மிகுதியைப் பார்க்கின்றேன். பிடிப்பது என்றால் நானும் வருகின்றேன் என கடற்றொழிற்றுறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னியின் தேசிய கைத்தொழில் உற்பத்திகளை மேம்படுத்தும் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் கடலில் எரிபொருள் எடுக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதேபோன்று கடல் வளத்திலும் நீர் வேளாண்மையிலும் நாம் பொருளாதாரத்தை ஈட்டலாம். விடத்தல்தீவில் 169 ஹெக்டேயர் நிலம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் முதலீட்டாளர்களை உள்வாங்கினாலும் உள்ளூர் மக்களையும் இணைத்துக் கொண்டு உற்பத்தி வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

பேசாலையின் தென்கடல் பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கு முதலிட தனியார் நிறுவனம் முன்வந்துள்ளது. அதில் அந்த பகுதி மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குறித்த துறைமுகம் கட்டி முடிய காலம் சென்றால் அங்குள்ள மீனவர்களுக்கு பயிற்சிகள், மானியங்கள் வழங்கி ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்படும். வேறு பகுதியைச் சேர்ந்த மீனவர்களும் வரலாம். இலங்கைக் கடல் இலங்கை மீனவர்களுக்கு சொந்தம். அதேநேரம் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இதுதான் எமது அரசாங்கத்தின் கொள்கை என அவர் தெரிவித்தார்.(5-4-250)

## இராசிபலன்

20.03.2021
பங்குனி 07 , சனிக்கிழமை
சப்தமி பின்னிரவு 4.31 மணிவரை
ரோகிணி பிற்பகல் 2.37 மணிவரை
சுப நேரம் 3.18-4.48 மணிவரை
இராகுகாலம் 9.18-10.48 மணிவரை
சந்திராஷ்டமம் சுவாதி விசாகம்

வளவன்

**மேஷம்** – எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**ரிஷபம்** – குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** – தொழில் ரீதியாக யாராவது உதவி கேட்டு வரலாம் , பயணத்தால் பலன் கிடைக்கும், சுப விரயங்கள் கூடும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**கடகம்** – குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** – எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்கள் இடம் பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** – வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்** – வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்தி வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**தனுசு** – இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மகரம்** – செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கும்பம்** – உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மீனம்** – நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், உடன் பிறப்புகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

உழைப்பும் ஊக்கமும் உண்டாக்கும் திறமையை

# விகாரைக்காக காணி அளவீடு எதிர்ப்பு தெரிவித்த மக்கள்



(திருமலை)

திருகோணமலை 64 ஆம் கட்டை பிரதேசத்தில் உள்ள குட்டியாராம விகாரையை சுற்றிய பகுதியில் நில அளவையாளர்கள் அளவீடு செய்ய முற்பட்டபோது பொதுமக்கள் கடும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64 ஆம் கட்டை பகுதியில் குட்டியாராம விகாரை, மலை உச்சியில் அமைந்துள்ளது. அதனைச்சுற்றி மக்களுடைய காணிகள் இருக்கின்றன.

இந்நிலையில், விகாரைக்கு 300 ஏக்கர் காணி தேவைப்படுவதாகக் கூறியே அளவீடு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

எதிர்ப்பை அடுத்து அளவையாளர்கள் மீண்டும் திரும்பிச் சென்றதாகவும் தெரிவித்தனர். (நி-4)

# எல்லையற்ற இணைய வசதியை அறிமுகப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

ஒவ்வொரு தனிநபருக்கும் எல்லையற்ற இணைய தரவு தொகுப்புகளை (**Unlimited Internet Packages**) அறிமுகப்படுத்துமாறு அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கும் இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் அனைத்து நிறுவனங்களிடமிருந்து கடந்த மார்ச் முதலாம் திகதிக்குள் எல்லையற்ற இணைய தொகுப்புகளுடன் பதிலளிக்க ஒரு உத்தரவை கோரியிருந்தது.

அந்த கோரிக்கைக்கு அமைவாக தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் அனைத்து நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட தொகுப்புகளை மதிப்பிடும் பணியில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தற்சமயம் உள்ளது.

அதன்படி 2021ஏப்ரல் மாதத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட எல்லையற்ற இணைய வசதி திட்டங்களை நுகர்வோர் எதிர்பார்க்கலாம் என்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது. (நி-4)

## விடுவிக்கப்பட்டார் அபேகுணவர்த்தன

(கொழும்பு)

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன விடுவிக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே அவர் குறித்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. (நி-4)

## கொழும்பிலுள்ள பிரித்தானிய விசா விண்ணப்ப அலுவலகம் மூன்று நாட்கள் திறந்திருக்கும்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரித்தானிய விசா விண்ணப்ப அலுவலகம், வாரத்தில் 3 நாட்களுக்கு திறக்கப்பட்டிருக்கும் என கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் முதல் இந்த நடைமுறை அமுலாக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய விசா விண்ணப்ப மையம் அறிவித்துள்ளது. இதன்படி வாராந்தம் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், கொழும்பிலுள்ள பிரித்தானிய விசா விண்ணப்ப அலுவலகம் திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வாடிக்கையாளர் தெரிவு செய்த நிலையம், முன் அனுமதி பெறப்பட்டதினத்தில் திறந்திருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் பிரித்தானிய விசா விண்ணப்ப மையம் அறிவித்துள்ளது. (நி-4)

# தொலைபேசி இலக்கத்தை மாற்றாமல் சேவை வழங்குநரை மாற்றலாம்

(கொழும்பு)

இலங்கையில் தொலைபேசி இலக்கத்தை மாற்றம் செய்யாமல் தொலைத்தொடர்பு சேவை வழங்குநரை மாற்றுவதற்கான வாய்ப்பை பாவனையாளர்களுக்கு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தவுள்ளதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் இத்திட்டத்தை செயற்படுத்த, தொலைத் தொடர்புகள்ஒழுங்குபடுத்தும்ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.


பாவனையாளர்களின் தேவையின் அடிப்படையில் தொலைபேசியில் பயன்படுத்தும் சிம் அட்டையை மாற்றம் செய்யாமல் தொலைத்தொடர்பு சேவை வழங்குநரை மாற்றம் செய்வதற்காக இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## கரடியும் இரண்டு வழிப்போக்கனும்



ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ராமு, மற்றொருவன் சோமு. இருவரும் இணை பிரியாத நண்பர்கள்.

ஒரு நாள் இருவரும் தேன் எடுப்பதற்காக காட்டுக்குப் பகுதிக்குச் சென்றனர். செல்லும் வழியில் ராமு சோமுவிடம், "நீ எதைபற்றியும் பயப்படாமல் என்னுடன் வா. என்னைப் போன்ற நண்பனைக் காண முடியாது.

என்ன துன்பம் வந்தாலும் நான் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று கூறினான். காட்டிலுள்ள பறவைகள், மரங்கள், காட்டு விலங்குகள் போன்றவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டே இருவரும் நடந்து சென்றார்கள்.


அப்போது கரடி ஒன்று உறுமும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் அவர்கள் செல்லும் வழியிலேயே, அந்த கரடி திடீரென வந்து கொண்டிருந்தது.

கரடியைக் கண்டதும் இருவரும் பயத்தில் ஓடத் தொடங்கினார்கள். கரடியும் அவர்களைத் துரத்தியது. ஓடத் தொடங்கிய சில விநாடிகளில் மரம் ஒன்று இருப்பதை ராமு கண்டான். உடனடியாக அந்த மரத்தில் ராமு ஏறிவிட்டான்.

சோமுவுக்கோ மரத்தில் ஏறத் தெரியாது என்று அறிந்திருந்தும் மரத்தில் ஏற முடியாதவனைக் கீழே விட்டுவிட்டுத் தன்னை மட்டும் காத்துக்கொள்ள சுய நலத்துடன் ராமு நடந்து கொண்டான்.

சோமுவுக்கு மரம் ஏறத் தெரியாததால் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். கவலையுடன் எப்படி கரடியிடமிருந்து தப்புவது என்று அவசரமாக யோசித்தான். இறந்தவன் போல் நடித்தால் கரடி தன்னைக் கொல்லாது என்று ஒரு யோசனை தோன்ற, பின்னர் நிலத்தில் விழுந்து மூச்சை அடக்கிக் கொண்டு இறந்தவனை போல் படுத்துக் கொண்டான். (தொடரும்)

# மகாபாரதம்




"அரசர்களே! இதோ வில்லும் அம்புகளும் உள்ளன. துவாரத்துடன் கூடிய சக்கரம் மேலே சுழன்றுக் கொண்டிருக்கிறது. அதற்கும் மேலே மீன் வடிவத்தில் ஒரு இலக்கு இருக்கிறது. அதன் நிழல் கீழே உள்ள தண்ணீரில் உள்ளது.

இந்த நிழலைப் பார்த்தவாறு மேலே உள்ள மீன் இலக்கை சுழலும் சக்கரத்தின் துவாரம் வழியே அம்பை செலுத்தி வீழ்த்த வேண்டும். அப்படி வீழ்த்துவோர்க்கு திரௌபதி மாலையிடுவாள்" என்றான்.

பல அரசர்கள் முயன்று தோற்றனர். தோற்றவர் பட்டியலில் ஜராசந்தன், சிசுபாலன், சல்லியன், கர்ணன், துரியோதனன் ஆகியோர் அடங்குவர்.

மன்னர்கள் யாரும் வெற்றி பெறாததால் திஷ்டத்துய்மன் நிபந்தனையை தளர்த்தினான்.

"போட்டியில் மன்னர்கள் மட்டுமன்றி யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்.

துருபதன் உள்ளத்தில் அர்ச்சுனன் கலந்து கொள்ளமாட்டானா என்ற ஏக்கம் இருந்தது. (பாண்டவர்கள் உயிரோடு தான் இருக்கிறார்கள் என்பது அவன் நம்பிக்கை)

அப்போது அந்தணர் கூட்டத்திலிருந்து ஒரு அந்தணன் எழுந்து நின்றான். கண்ணன் உடன் அவன் அர்ச்சுனன் என்பதை தெரிந்து கொண்டார்.

அந்த வாலிபன் நேராக வந்து மீன் வடிவ இலக்கை வீழ்த்த திரௌபதி அவனுக்கு மாலையிட்டாள்.

திரௌபதியுடன் பாண்டவர்கள் வீடு திரும்பினர். தாங்கள் கொண்டுவந்த கனி பற்றி வீட்டினுள் இருந்த குந்தியின் காதில் விழுமாறு கூறினர்.

குந்தியும் கொண்டு வந்ததை ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்றாள். குந்தி வெளியே வந்து பார்த்த போது தான் திரௌபதியைக் கண்டாள். மனக்குழப்பம் அடைந்தாள்.

யுதிஷ்டிரர் "அர்ச்சுனனே திரௌபதியை மணக்கட்டும்" என்றார்.

ஆனால் தாய் சொல்லைத் தட்டாத அர்ச்சுனன் "திரௌபதி ஐவருக்கும் உரியவள்" என்றான். (தொடரும்)

# கருணைக் கொலை செய்ய ஸ்பெயின் பாராளுமன்றம் அனுமதி

(மேட்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் தீராத நோயால் நீண்ட நாட்கள் அவதிப்படுவோர் நிலை மிகவும் மோசமாக உள்ளது.

எனவே இதுபோன்றவர்களைக் கருணைக் கொலை செய்ய அனுமதிக்கும் கூட்டம் ஸ்பெயின் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

வருகிற ஜூன் மாதம் முதல் இந்தக் கருணைக் கொலை சட்டம் அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இடதுசாரி கூட்டணி அரசு இந்த சட்டத்தை கொண்டு வந்துள்ளது. இதற்கு 202 எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். (நி-4-8)

# தடுப்பு மருந்திற்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடை நீக்கம்

(பாரிஸ்)

அஸ்ட்ராஜெனெகா கொரோனாத் தடுப்பு மருந்துக்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடையை பிரான்ஸ் உள்ளிட்ட 4 ஐரோப்பிய நாடுகளில் நீக்கியுள்ளன.

அஸ்ட்ராஜெனெகாவின் தடுப்பு மருந்தால் இரத்த உறைவு ஏற்படுவதாக புகார்கள் எழுந்தன.

இதனால் அந்தத் தடுப்பு மருந்தை பல்வேறு ஐரோப்பிய நாடுகள் நிறுத்தி வைத்துள்ளன.

ஆனால் அதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்று உலக சுகாதார அமைப்பும், ஐரோப்பிய மருந்து ஒழுங்குமுறை ஆணையமும் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் ஸ்பெயின் மற்றும் இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இந்தத் தடுப்பூசியை மீண்டும் மக்களுக்கு செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தடுப்பூசியால் எந்தப் பக்கவிளைவுகளும் இல்லை என ஆய்வுகளின் முடிவில் தெளிவாகியுள்ளது. (நி-4-8)




மெக்சிக்கோவிலிருந்து புறப்பட்ட விமானம் பிரதான ஓடுபாதைக்கு வந்தபோது விமானத்தின் முன் பகுதி சேதமடைந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் இருந்த 127 பயணிகளும் பாதுகாப்பு வழியூடாக வெளியேற்றப்பட்டனர்.

# பிரான்ஸில் மூன்றாவது அலை; நான்கு வாரங்களுக்கு ஊரடங்கு



(பாரிஸ்)

தொடர்ந்து நான்கு வாரங்களுக்கு ஊரடங்குக் கட்டுப்பாடுகளை விதித்து பிரான்ஸ் நாட்டு அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாளுக்கு நாள் புதிய பாதிப்புகள் கிடுகிடுவென அதிகரித்து வருகின்றன.

இதுதொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசிய பிரதமர் ஜீன் கேஸ்டெக்ஸ், பிரான்ஸ் நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலை உருவாகியிருப்பது போன்ற சூழல் நிலவுகிறது.

புதிய பாதிப்புகள் அதிகரிப்பது மட்டுமன்றி உருமாறிய பல்வேறு வைரஸ்களும் தாக்கத் தொடங்கியுள்ளன.

இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக நேற்று நள்ளிரவு முதல் அடுத்த நான்கு வாரங்களுக்கு கிரேட்டர் பாரிஸ், நைஸஸ் ஏரியா உள்ளிட்ட 16 இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஊரடங்கு சற்று தளர்வுகளுடனே காணப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4-8)

# 1350 வகை நெல்லினங்கள் இளம் விவசாயியின் முயற்சி



(டில்லி)

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒரு நெல் ரகம் உள்ளது. அப்படிப்பட்ட நெல் ரகங்களை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும்' என்ற எண்ணத்தில் ஒரே இடத்தில் 1,350 பாரம்பரிய நெல் ரகங்களைச் சாகுபடி செய்து வருகிறார் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த விவசாயி சையது கனி கான். அண்மையில் பாரம்பரிய நெல் அருங்காட்சியகத்தை தன்னுடைய வீட்டிலேயே தொடங்கியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

இந்தியாவில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நெல் ரகங்கள் இருந்ததாக கூறப்படுகிறது. அவற்றில் இப்போது 18 ஆயிரம் நெல் ரகங்கள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன.

10 ஆண்டுகளுக்கு முன்னர் 40 ரகங்களிலிருந்து தொடங்கிய பாரம்பரிய நெல் சாகுபடி, இன்று 1,300 ரகங்களில் வந்து நிற்கிறது.

இதன் அடுத்தகட்டமாக தனது வீட்டின் மொட்டை மாடியில் 1,350 நெல் ரகங்களையும் காட்சிக்கு வைத்திருக்கிறார். இது ஒரு அருங்காட்சியகம் போன்று அமைத்திருக்கிறது.

பார்வையிட்டு விதைப் பெருக்கத்துக்காக நெல் விதைகளை இலவசமாகப் பெற்றுச் செல்லலாம். ஆனால் அதற்கு நிபந்தனைகள் உண்டு. விதைகளை வாங்க வருபவர்கள் இயற்கை விவசாயம் செய்ய வேண்டும் கொடுக்கும் விதையைப் பெருக்கி, மற்றவர்களுக்கும் பகிர்ந்துகொள்பவராக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4-8)

# பக்டீரியாக்கள் பூமியில் மட்டுமல்ல விண்வெளியிலும் பெருகி வருகிறதாம்

(வோஷிங்டன்)

பூமியில் மட்டும் பக்டீரியாக்களின் பெருக்கம் அதிகரிக்கவில்லை விண்வெளியிலுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திலும் இவை பெருகி வருகிறது என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

குறைந்த ஈர்ப்பு சூழலிலும் கூட இவை வளர்ந்து வருகிறது என்பது தான் விஞ்ஞானிகளுக்கே இன்னும் குழப்பமாக இருக்கிறது.

அமெரிக்கா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இப்போது ஐ.எஸ்.எஸ்ஸில் வெவ்வேறு இடங்களில் வாழும் நான்கு பக்டீரியாக்களைக் கண்டுபிடித்துள்ளனர். இதில் மூன்று பக்டீரியா இனங்கள் இப்போது வரை எந்த இனத்தைச் சேர்ந்தது என்று தெரியவில்லை, இவை அறிவியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் உள்ளது.

சில பக்டீரியாக்கள் மண் மற்றும் நன்னீரில் காணப்படும் பக்டீரியாக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது மட்டும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவை நைட்ரஜன் நிர்ணயம், தாவர வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள பக்டீரியாக்கள் என்று ஆராய்ச்சி குழு தெரிவித்துள்ளது. மேலும், இவை முக்கியமாகத் தாவர நோய்க்கிருமிகளை நிறுத்த உதவும் நல்ல பக்டீரியாக்கள் தான் என்று ஒரு ஆராய்ச்சி குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-8)

# அமெரிக்காவின் பேச்சுவார்த்தைகளை புறக்கணிக்கும் வடகொரியா

(பியாங்யாங்)

அமெரிக்காவின் பேச்சுவார்த்தைக்கான அனைத்து முயற்சிகளையும் புறக்கணிப்பதாக வட கொரியா அறிவித்துள்ளது.

அமெரிக்கா விரோதக் கொள்கையைக் கொண்டுள்ளதாகவும் வோஷிங்டனுக்கும் பியோங்யாங்கிற்கும் இடையில் எந்தவொரு தொடர்பும் அல்லது உரையாடலும் இருக்க முடியாது என்றும் வட கொரியாவின் முதல் வெளியுறவுத் துறை அமைச்சர் சோ சோன் ஹூய் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுடன் தொடர்பை வலுப்படுத்தி பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்காக அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஆன்ரனி பிளிங்கன் சில இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டார். அமெரிக்காவின் அத்தகைய பேச்சுவார்த்தை முயற்சியை நாங்கள் புறக்கணிப்போம் என சோ சோன் ஹூய் தெரிவித்தார்.

அமெரிக்காவின் புதிய ஆட்சியானது, வட கொரியாவின் அச்சுறுத்தல் என்ற ஒரு பைத்தியக்காரத்தனமான கோட்பாட்டையும் முழுமையான அணுசக்தி மயமாக்கலை வடகொரியா மேற்கொள்கிறது என்ற ஆதாரமற்ற சொல்லாடல்களையும் மட்டுமே முன்வைக்கிறது.

பிடனின் நிர்வாகம் பெப்ரவரியில் எம்முடன் தொடர்பை ஏற்படுத்தத் தொடங்கியது. பின்னர் மூன்றாம் நாடு வழியாக பல மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் மற்றும் செய்திகளை அனுப்பியுள்ளது. இவ்வாறு தொடர்புக்கான முயற்சிகள் பொதுக் கருத்தை வளர்ப்பதற்கான மலிவான தந்திரமே" என அவர் தெரிவித்துள்ளார். (நி-4-8)

# இலங்கை - இந்திய உறவு மேம்பட புதியதொரு அத்தியாயம் ஆரம்பம்

## இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே



(கொழும்பு)

அயோத்தி இராமர் கோவில் நிர் மாண பணிகளுக்காக இலங்கையின் சீதையம்மன் ஆலயத்திலிருந்து புனித சின்னம் இந்தியாவிற்கு வழங்கும் நிகழ்விற்காக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போது, இருநாடுகளுக்கும் இடையில் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கு எவ்வளவு வழிகள் உள்ளமையை உணர்ந்து வியந்தேன்.

இதனூடாக இரு தரப்பு நீண்டகால நல்லுறவுடனான வரலாற்றில் மற் றொரு அத்தியாயம் எழுதப்படுவதை காணக் கூடியதாக இருந்தமையயிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

வெள்ளவத்தை மயூராபதி ஶ்ரீ பத்திர காளி அம்மன் ஆலய மண்டபத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது மேற் கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ் தானிகரின் முயற்சியின் ஊடாக இந்த புனித சின்னத்தை இந்தியாவிற்கு வழங்கும் நிகழ்விற்காக எனக்கு அழை ப்பு விடுக்கப்பட்ட போது, இருநாடு களு க்கும் இடை யில் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கு எவ்வளவு வழிகள் இருக்கின்றன என்று வியந்தேன்.

இந்நிலையில் இலங்கை மற்றும் இந்தியாவின் நீண்ட கால நல்லுறவுடனான வரலாற்றில் மற்றொரு அத்தி யாயம் எழுதப்படுவதை காணக்கூடியதாக இருந்தமையயிட்டு மகிழ்ச்சிய டைகின்றேன்.

அதுமாத்திரமன்றி இதனூடாக இரு நாடுகளினதும் மக்களுக்கு இடையிலான உறவிற்கும் புதிய அடித்தள மொன்று இடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்கு பின்னதாக இந்தியர்கள் பலர் சீதா-எலியவிற்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

அதேவேளை அயோத்தியில் நிர் மாணிக்கப்படும் புதிய கோயிலைப் பார்வையிடுவதற்கு இலங்கையர்களும் இந்தியாவிற்குச் செல்வார்கள்.

எனவே இருநாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தக் கூடிய இந்த முயற்சிக்காக முன்னின்று செயற்பட்ட அனைவருக்கும் நன்றிகூற விரும்புகின்றேன் என்று அவர் தெரிவித்தார். (நி-4)

## சர்வதேச நீதி கோரி மட்டக்களப்பில் மாபெரும் பேரணி



(மட்டக்களப்பு)

சர்வதேச நீதி கோரி மட்டக்களப்பில் மாபெரும் பேரணியும் போராட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணி இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த நீதி கோரிய எழுச்சிப்பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் சர்வதேச நீதி கோரி முன்னெடுக்கப் பட்டு வந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்தின் 17 ஆவது நாளான நேற்று அதனை நிறைவுறுத்தும் வகையிலும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நீதிகோரிய வகையிலும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. (நி-4)

# மீண்டும் திரிபோஷா வழங்க ஏற்பாடுகள்



(கொழும்பு)

திரிபோஷா உற்பத்திக் கான சோளம் கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக் கான கொரிய நிறுவனம் ஆகியன 6 இலட்சம் அமெரிக்க டொல ர்கள் பெறுமதியான நிதியுதவி வழங்குகின்றன.

1.1 மில்லியன் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கு வழங்கப்படும் சோளம் சார்ந்த உணவுப் பொருளான திரிபோஷாவை தயாரிப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

போஷாக்கு குறைவான சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், தாய்ப்பாலூட்டும் பெண்களுக்கு போஷாக்கினை வழங்குவதற்காக சுமார் 50 வருடங்களாக இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டு வரும் திரிபோஷா நிகழ்ச்சியினை தொடர்வதற்கு இந்த உதவித் தொகை துணை புரியும்.

மும்மடங்கு ஊட்டச்சத்துகள் என்ற பொருள்படும் திரிபோஷா என்பது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மிகைநிரப்பு உணவு உற்பத்தியாகும். (நி-4)

## அருந்தமிழின் உயர்வெல்லாம் அறிந்த ஐயன்



உளமெல்லாம் பேரதிர்ச்சி கொண்டதம்மா!
ஒப்பற்ற பெருங்கலைஞன் மறைவைக் கேட்டு
நிலமெல்லாம் ஈழத்தின் பெருமை சொல்ல
நிமிர்வோடு இசைக் கலையின் நுட்பம் கற்று
வளமிகுந்த தன் குரலால் பலரும் போற்ற
வாரித்தான் இசைக்கொடையை வழங்கி நின்ற
பலர் புகழ்ந்த எம் ஐயன் பாரை நீத்தான்
பதறித்தான் இசை உலகம் வாடிற்றம்மா!

எப்போதும் இசைக்கடலில் மூழ்கி நின்றோன்
ஏற்றமிகு மனத்தாலும் வாக்கதாலும்
தப்பேதும் இல்லாது இசையைப் போற்றி
தான் பெற்ற பெரும் சொத்தைப் பலருக்கீந்தோன்
முப்போதும் இசையன்றி வேறு எண்ணம்
முனையளவும் இல்லாத பெரிய ஏந்தல்
இப்போது விண் சேர்ந்தான் இவனைப் போல
இனியார் தான் இங்குள்ளார்? இழந்து போனோம்.

கம்பனது கழகமதைக் கண்ணாய்ப் போற்றி
கற்றவர்கள் மத்தியிலே உயர்வு தந்தோன்
தம் பெரிய இசையாலே எமக்காய்ப் பாடி
தனிப் பெருமை கழகத்திற்காக்கித் தந்தோன்
நம்பி எமைப் பிள்ளைகளாய்ப் போற்றி நின்றோன்
நலமிகுந்த தம் வரவால் உறவு செய்தோன்.
எம் பெரிய வளர்ச்சிக்கு வேராய் நின்று
ஏற்றங்கள் செய்தோரில் உயர்ந்து நின்றோன்.

சுராங்களிலே வார்த்தைகளை அமைத்துக்காட்டி
சொக்கித்தான் சபையினரை மயங்க வைத்தோன்.
வரமெனவே அமைந்த பெரும்வடிவினாலே
வளமாகச் சபைகளையே நிறைத்து நின்றோன்.
அருந்தமிழின் உயர்வெல்லாம் அறிந்த ஐயன்
அற்புதமாய் நாடகங்கள் நடிக்கவல்லோன்
பெரும் பதவிவகித்தாலும் பெருமை காட்டா
பெரும் பண்பன் பிள்ளையெனப் பழகும் மேலோன்

அமிழ்தொத்த இவர் இசையைக் கேட்டு எங்கள்
அரங்குகளில் தமிழ்நாட்டுக் கலைஞரெல்லாம்
தமிழ்ப் பெரியோன் இவன் என்று தரணிதொட்டு
தாழ்ந்ததனை நினைக்கின்றேன் தஞ்சமென்று
நிமிர்வுடைய இவர்தனையே பணிந்து நின்று
நேசத்தால் உறவாகி நின்றதெல்லாம்
தமிழ் ஈழம் இனி என்றும் காணுமாமோ?
தள்ளாத பெருஞ் சொத்தை இழந்து போனோம்.


எந்தனக்கும் சிலநாட்கள் ஏற்றம்மிக்க
இசையதனைப் பிச்சையதாய் இட்ட வள்ளல்
சொந்தமென எனை நினைந்து இல்லந்தேடி
சோர்வின்றி தானே வந்தருளும் செய்தோன்.
மந்தமிகு புத்தியதால் மாண்புமிக்க
மாமேதை தந்த வரம் இழந்து நின்று
நொந்த கதை இப்போதும் நினைவில் பாயும்
நோற்றாது பெருவரத்தை இழந்து போனேன்.

கணபதிப்பிள்ளை அவரின் கனிந்த நெஞ்சும்
கற்றோர்கள் வியக்கின்ற தமிழும் பாட்டும்
மனமதனில் வஞ்சமிலா நினைவும் அன்பும்
மாறாத பக்தியிலே ஊறிப் பண்ணால்
தினம் தினமும் ஈசனையே பாடும் வாழ்வும்
தேற்றமொடு மாணவரை ஏற்றி என்றும்
நினைவதனில் போற்றுகிற நிமிர்ந்த பண்பும்
நினைத்தாலும் எவர்க்கேனும் வருமோ கூறீர்!

வேற்றுலகம் சென்றாலும் எங்கள் ஐயன்!
விண்ணிருந்தும் எமைத்தாங்கி நிற்பான் நல்ல
நாற்றுகளாய் நாம் விளைந்து பயனும் செய்ய
நல்ல வரம் அங்கிருந்தும் எமக்கு ஈவான்
மாற்றமிலா தனதன்பால் கழகந் தன்னை
மண்மீது உயர்த்திடுவான் மனதில் வைத்து
போற்றி அவன் திருவடியைப் பணிந்து நின்றோம்
போனாலும் அவன் எம்முள் நிற்பான் கண்டீர்.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

# வாழ்க்கை செலவினங்களை கட்டுப்படுத்த உற்பத்தி மற்றும் வருமானங்களை அதிகரிக்க வேண்டும்



(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பில் கருத்துரைப்பவர்கள் நெல் கொள்வனவு அதிகரிப்பினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் குறித்து கருத்துரைப்பதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கை செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகள் உலக சந்தையின் சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்றன. வரிகளை குறைப்பதன் ஊடாக அவற்றின் விலைகளை கட்டுப்படுத்த முடியும்.

நாட்டில் பயிரிடக்கூடிய 17 பயிர்கள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து இறக்குமதி தடைகள் விதிக்கப்பட்டன. இதனூடாக குறித்த பயிர்கள் உள்நாட்டிலேயே பயிரிடப்பட்டுள்ளன. ஒரு கிலோகிராம் நெல்லுக்கான கொடுப்பனவு 32 ரூபாயிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நெல்லுக்கான கொடுப்பனவின் நன்மைகள் ஒரு பகுதியிலுள்ள மக்களுக்கு மாத்திரமன்றி முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கும் கிடைத்துள்ளன.

மனித உரிமைகள் குறித்து பேசுபவர்கள் இதனூடாக மக்களுக்குக் கிடைத்த நன்மைகள் தொடர்பில் கருத்துரைப்பதில்லை.

மக்களின் பிரச்சினைகளைப் பார்த்து அரசாங்கம் அமைதியாக செயற்படாது. அத்துடன் காடழிப்பு செயற்பாடுகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் ஆதரவளிக்காது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்ததாக அவரது ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (நி-4)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனை

## இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகரிப்பு

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் மாணவர்களை இலக்கு வைத்து மருந்தகங்களின் மூலம் போதைப் பொருள் விற்பனை இடம்பெற்று வருவது குறித்து பாதுகாப்பு துறையினர் அவதானம் செலுத்தியுள்ளனர்.

திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் போதைப் பொருள் விற்பனை காரணமாக பாடசாலை மாணவர்கள், கிராம தோட்டப்பகுதி இளைஞர்கள் பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த இரத்தினபுரி மாவட்ட போதைப் பொருள் பொலிஸ் சுற்றிவளைப்பு பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் போதையை ஏற்படுத்த வல்ல பொருட்களை விற்பனை செய்து வந்த இத்தகைய மருந்தகங்களில் குறுகிய காலத்தில் உடல்,உள, உயிர் பாதிப்புக்களை ஏற்படுத்த வல்ல மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருவது விசாரணைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் இளைஞர்களைக் கவரக்கூடிய குளிசை வகைகளை இவர்கள் பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுறது. (நி-4)

# உலக பாரம்பரிய இடங்களாக தலதாபெரஹெரா, அபயவாவி

(கொழும்பு)

கண்டி தலதா பெரஹெராவை உலக பாரம்பரியத்தில் பெயரிடுவதற்கு யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள யுனெஸ்கோ அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தை பாரிஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அதன் பொதுச்செயலாளர் டாக்டர் புஞ்சி நிலமே மீகஸ்தென்ன தெரிவித்தார்.

இது ஒரு அபூர்வமான பாரம்பரியம் என்று பெயரிடப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டின் பிரதான முதல் ஏரியாக கருதப்படும் அபய வாவி (பசவக்குளத்தை) உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கும் திட்டத்தை நீர்ப்பாசன அமைச்சகம் சமர்ப்பித்துள்ளதாகவும் டாக்டர் புஞ்சி நிலமே மீகஸ்தென்ன தெரிவித்தார். (நி-4)

# மூவர் கைது

(கொழும்பு)

சுகாதார வழிமுறைகளை பின்பற்ற தவறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். முகக் கவசம் அணியாமை, சமூக இடைவெளியினை பேணத் தவறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நான்கு பிள்ளைகள்!

ஆன்மிகப் பேச்சாளர் ஒருத்தர் வந்தார். எனக்குச் சம்பந்தமில்லாத ஒரு கேள்வியை அவர் என்னைப் பார்த்துக் கேட்டார். அது என்ன கேள்வி என்றால்....

''தசரதனுக்கு ஏன் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள்?'' என்று கேட்டார்.

"எனக்கு என்ன தெரியும். இது தசர்தனைப் பார்த்து நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி!" என்றேன்.

"தசரதன் கேட்டது ஒரு பிள்ளைதான் " என்றார்.

"அப்படியா?" என்றேன்.

"ஆமாம்!" என்றார். தனக்குப் பின்னாடி நாட்டை ஆளவும். தான் நல்லகதி அடைய உதவவும்தசரதன் கேட்டது ஒரு பிள்ளைதான். அதே மாதிரி தேவர்கள் கேட்டதும் இராவணவதம் செய்ய ஒரு இராமனைத் தான்...

அப்படி இருக்கும் போது எதற்கு நான்கு பிள்ளைகள்? இதற்கு அவர் என்ன விளக்கம் கொடுக்கிறார் என்றால்....

''இந்த உலகத்தில் நான்கு வகையான தர்மங்கள் உண்டு..அந்த நான்கு வகையான தர்மங்களையும் மக்களுக்கு அனுசரித்துக் காட்டுவதற்காகத் தான் அந்த நான்கு சகோதரர்கள் தோன்றினார்களே தவிர இராவணனை வதம் செய்வதற்காக அல்ல..'' என்றார் அவர்.

அது என்ன நான்கு வகையான தர்மம்.

முதலில் வருவது.. சாமானிய தர்மம். அதாவது பிள்ளைகள் பெற்றோர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்..

சீடன் குருவிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.. மனைவி கணவனிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்... அது மாதிரி உள்ளதெல்லாம் சாமானிய தர்மங்கள்.

இதை அனுசரித்து நடந்து காட்டியவன் இராமன்.

சாமானிய தர்மங்களை ஒழுங்காக செய்து வந்தால் கடைசியிலே ஒரு நிலை வருமாம். அந்த நிலையிலே இறைவன் அடி ஒன்றே நிரந்தரம்...மற்ற எதுவும் நிரந்தரமல்ல என்ற நினைப்பு வருமாம்.

அதனாலே தான் குலசேகர ஆழ்வார் சொன்னார்:

"இந்திர லோகம் ஆழும் அச்சுவை பெறினும் வேண்டேன்!" என்று.

கிருஸ்ணலீலா தரங்கினி ஆசிரியர் "தாமரைகளைப் போன்ற உன் பாதங்களைச் சுற்றி நான் தேன் வண்டு போல வந்து கொண்டிருக்க வேண்டும்" என்றாராம்.

இத்தகைய தர்மத்துக்கு 'சேஷ தர்மம்' என்று பெயராம். இதைத் தான் அனுசரித்துக் காட்டினான் இலக்குவன். சரி... மூன்றாவது என்னவென்றால் ''விசேஷ தர்மம்'' அதாவது தூரத்திலே இருந்து கொண்டு எப்பொழுதும் இறைவன் ஞாபகமாகவே இருப்பது!

சேஷ தர்மத்தை விட விசேஷ தர்மம் கடினமானது. பகவானுக்குப் பக்கத்திலேயே இருந்துகொண்டு அவனது ஞாபகமாக இருப்பது கடினமில்லை.. ஆனால் தூரத்திலே இருந்துகொண்டு அவனையே நினைப்பது கடினம்.

அதைச் செய்து காட்டியவன் பரதன்!

நான்காவது தர்மம் என்னவென்றால் விசேஷதர தர்மம்.

இறைவனைவிட அவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வது இந்த தர்மம். இதைக் கடைப்பிடித்துக் காட்டியவன் சத்துருக்கன். அதனாலே தான் பரதனை விடாமல் பின்பற்றி அவனுக்குத் தொண்டுகள் செய்தான்.

ஆக இப்படி நான்கு வகையான தர்மங்களை கடைப்பிடித்து மக்களுக்கு காட்டுவதற்காகத் தான் இறைவன் நான்கு அவதாரங்களாக தோன்றினார் என விளக்கம் கொடுத்தார் அந்த ஆன்மிகப் பேச்சாளர்.

என்னதான் நான்கு வகையான தர்மங்களை அனுசரித்துக் காட்டினாலும் இன்றைக்கு மக்கள் எந்த அளவிற்கு அது மாதிரி நடந்துகொள்கிறார்கள்? ஒரு இராமாயண சொற்பொழிவாளர்... பேசுவதற்காகப் புறப்பட்டார்.

"எங்கே புறப்பட்டு விட்டீர்கள்?" என்று கேட்டார் வீட்டுக்கார அம்மா.

''இராமாயண சொற்பொழிவு நடத்தப் போகிறேன்.. நீயும் கூட வாவேன்!" என்று கூப்பிட்டார்.


"நான் வரவில்லை... நீங்கள் போய் வாருங்கள்!" என்றார் அவர்.

"என்ன இது இப்படிச் சொல்கிறாய்? அன்று இராமன் காட்டுக்குப் போகிறேன் என்று சொன்னதும் சீதை உடனே நானும் வருவேன் என்று புறப்படவில்லையா? "என்றார்.

''சீதை ஒன்றும் விவரம் இல்லாமல் புறப்படவில்லை... வீட்டில் வயதான மாமனார்... மாமியார்கள்... மைத்துனர்கள்.. இவர்களுக்கு எல்லாம் சமைத்துப் போட்டுக் காப்பாற்ற வேண்டியிருக்கு.. இதைவிட காட்டுக்குப் போய்விடுவது நல்லது என்று நினைத்தது ஒன்றும் தப்பில்லை!" அப்படி என்றார் அந்த அம்மா.

11

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**மன்னார் மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை.**

மன்னார் ந.ச (15), மன்னார் பி.ச (20), நானாட்டான் பி.ச (16), முசலி பி.ச (16), மாந்தை மேற்கு பி.ச (21) மொத்தம்- 88.

**வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

வவுனியா ந.ச (20), வவுனியா வடக்கு பி.ச (23), வெங்கலசெட்டிக்குளம் பி.ச (18), வவுனியா தெற்கு தமிழ் பி.ச (26), வவுனியா தெற்கு சிங்கள பி.ச (16) மொத்தம்- 103.

**முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை.**

மாந்தை கிழக்கு பி.ச (13), துணுக்காய் பி.ச (13), புதுக்குடியிருப்பு பி.ச (20), கரைதுறைப்பற்று பி.ச (21) மொத்தம்-67.

**மட்டக்களப்பு மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை.**

மட்டக்களப்பு மா.ச (33), ஏறாவூர் ந.ச (16), காத்தான்குடி ந.ச (16), கோறளைப்பற்று மேற்கு பி.ச (18), ஏறாவூர்பற்று பி.ச (30), கோறளைப் பற்று பி.ச (23), கோறளைப்பற்று வடக்கு பி.ச (18), மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பி.ச (20), மண்முனைப்பற்று பி.ச (16), மண்முனை மேற்கு பி.ச (16), மண்முனை தென் மேற்கு பி.ச (16), போரதீவுப்பற்று பி.ச (16) மொத்தம்- 238.

**அம்பாறை மாவட்டத்தின் 20 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை.**

கல்முனை மா.ச (40), அக்கரைப்பற்று மா.ச (20), அம்பாறை ந.ச. (16), தெஹியத்தகண்டிய பி.ச (38), தமன பி.ச (16), உஹன பி.ச (28), மகாஓயா பி.ச (18), நாமல் ஓயா பி.ச (16), பதியதலாவை பி.ச (20), நாவிதன்வெளி பி.ச (13), சம்மாந்துறை பி.ச (20), இறக்காமம் பி.ச (13), அக்கரைப்பற்று பி.ச (8), பொத்துவில் பி.ச (20), அட்டாளைச்சேனை பி.ச (18), ஆலயடிவேம்பு பி.ச (16), லஹுகல பி.ச (18), காரைதீவு பி.ச (11), நிந்தவூர் பி.ச (13), திருக்கோவில் பி.ச (16) மொத்தம்- 378.

**திருகோணமலை மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை.**

திருகோணமலை ந.ச (23), கிண்ணியா ந.ச (13), வெருகல் பி.ச (13), சேருவில பி.ச (16), கந்தளாய் பி.ச (21), மொரவெவ பி.ச (16), கோமரங்கடவல பி.ச (16), பதவிஸ்ரீபுர பி.ச (16), திருகோணமலை பட்டினமும் சூழலும் பி.ச (20), குச்சவெளி பி.ச (16), தம்பலகாமம் பி.ச (16), மூதூர் பி.ச (21), கிண்ணியா பி.ச (13) மொத்தம்-220.

**குருநாகல் மாவட்டத்தின் 21 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை.**

குருநாகல் மா.ச (21), குளியாப்பிட்டி ந.ச (16), கிரிபாவ பி.ச (16), கல்கமுவ பி.ச (31), பொல்பித்திகம பி.ச (30), நிக்கவரெட்டிய பி.ச (35), கோபேகனை பி.ச (16), மஹவ பி.ச (33), இப்பாகமுவ பி.ச (41), வாரியப்பொலை பி.ச (38), பண்டுவஸ்நுவர பி.ச (36), பிங்கிரிய பி.ச (21), உடுபத்தாவ பி.ச (18), பன்னல பி.ச (41), குளியாப்பிட்டி பி.ச (41), அலவ்வ பி.ச (25), நாரம்மல பி.ச (20), பொல்கஹவல பி.ச (38), குருநாகல் பி.ச (41), மாவத்தகம பி.ச (26), ரிதீகம பி.ச (36) மொத்தம்- 620.

**புத்தளம் மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

புத்தளம் ந.ச (18), சிலாபம் ந.ச (20), கல்பிட்டி பி.ச (31), புத்தளம் பி.ச (23), வனாத்தவில்லு பி.ச (18), கருவலகஸ்வெவ பி.ச (18), நவகத்தேகம பி.ச (15), ஆணமடுவ பி.ச (30), ஆரச்சிகட்டு பி.ச (21), சிலாபம் பி.ச (31), நாத்தாண்டிய பி.ச (40), வென்னப்புவ பி.ச (41) மொத்தம்-306.

| அட்டவணை -6 உள்ளூராட்சி சபைஉறுப்பினர்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | A | B | மாவட்டம் | A | B |
| கொழும்பு | 329 | 543 | மன்னார் | 54 | 88 |
| கம்பஹா | 417 | 688 | மட்டக்களப்பு | 146 | 238 |
| களுத்துறை | 277 | 457 | அம்பாறை | 231 | 378 |
| கண்டி | 377 | 620 | திருகோணமலை | 136 | 220 |
| மாத்தளை | 168 | 273 | அனுராதபுரம் | 228 | 372 |
| நுவரெலியா | 186 | 306 | பொலன்னறுவை | 102 | 166 |
| காலி | 272 | 447 | குருநாகல் | 378 | 620 |
| மாத்தறை | 224 | 365 | புத்தளம் | 186 | 306 |
| அம்பாந்தோட்டை | 160 | 262 | பதுளை | 239 | 391 |
| யாழ்ப்பாணம் | 243 | 402 | மொனராகலை | 121 | 198 |
| கிளிநொச்சி | 40 | 66 | இரத்தினபுரி | 258 | 423 |
| வவுனியா | 63 | 103 | கேகாலை | 216 | 357 |
| முல்லைத்தீவு | 41 | 67 | மொத்தம் | 5092 | 8356 |

A-வட்டாரஉறுப்பினர்கள் ,B-மொத்தஉறுப்பினர்கள்

**அநுராதபுரம் மாவட்டத்தின் 19 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை.**

அநுராத்புரம் மா.ச (25), மதவாச்சி பி.ச (20), ரம்பேவ பி.ச (18), கெபித்திகொல்லாவ பி.ச (18), பதவியா பி.ச (16), கஹட்ட கஸ்திகிலிய பி.ச (16), ஹொரவப்பொத்தான பி.ச (20), கலென்பிந்துனுவெவ பி.ச (18), தலாவ பி.ச (33), நுவரகம் பலாத்த கிழக்கு பி.ச (18), நுவரகம் பலாத மத்தி பி.ச (26), நொச்சியாகம பி.ச (20), ராஜாங்கனய பி.ச (16), கல்நேவ பி.ச (16), இப்பலோகம பி.ச (16), மிஹிந்தலை பி.ச (16), திறப்பன பி.ச (16), கெக்கிராவ பி.ச (28), பலாகல பி.ச (16) மொத்தம்- 372.

**பொலநறுவை மாவட்டத்தின் 8 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

பொலநறுவை மா.ச (10), எலஹர பி.ச (16), ஹிங்குராகொட பி.ச (33), மெதிரிகிரிய பி.ச (31), லங்காபுர பி.ச (23), வெலிகந்த பி.ச (16), திம்புலாகல பி.ச ( 21), பொலநறுவை பி.ச (16) மொத்தம்-166.

**பதுளை மாவட்டத்தின் 18 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

பதுளை மா.ச (25), பண்டாரவளை மா.ச (16), ஹப்புத்தளை ந.ச (11), மகியங்கனை பி.ச (23), ரிதீமாலியத்த பி.ச (18), சொரணா தொட்ட பி.ச (16), மீகஹகிவுல பி.ச (16), கந்தகெடிய பி.ச (16), பஸ்ஸறை பி.ச (21), லுணுகல பி.ச (20), பதுளை பி.ச (16), ஹாலியெல பி.ச (40), ஊவபரணகம பி.ச (35), வெலிமட பி.ச (41), பண்டாரவளை பி.ச (16), எல்ல பி.ச (21), ஹப்புத்தளை பி.ச (20), ஹல்தும்முள்ள பி.ச (20) மொத்தம்-391.

**மொனராகலை மாவட்டத்தின் 10 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

பிபிலை பி.ச (16), மெதகம பி.ச (16), மடுல்ல பி.ச (18), சியம்பலாண்டுவ பி.ச (23), மொனராகலை பி.ச (18), படல்கும்புர பி.ச (18), புத்தல பி.ச (18), கதிர்காமம் பி.ச (15) , வெல்லவாய பி.ச (23), தனமல்வில பி.ச (33) மொத்தம்-198.

**இரத்தினபுரி மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

இரத்தினபுரி மா.ச (25), பலாங்கொடை ந.ச (16), எம்பிலிப்பிட்டிய ந.ச (13), எகலியகொட பி.ச (31), இரத்தின புரி பி.ச (36), குருவிட்ட பி.ச (43), பெல்மடுல்ல பி.ச (36), பலாங் கொடை பி.ச (35), இம்புல்பே பி.ச (23), கொடக்கவெல பி.ச (30), கஹ வத்த பி.ச (16), வெலிகபொல பி.ச (18), நிவித்திகல பி.ச (23), அயகம பி.ச (16), கலவான பி.ச (16), எம்பிலிப்பிட்டிய பி.ச (28), கொலன்ன பி.ச (18) மொத்தம்-423.

**கேகாலை மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை**

கேகாலை ந.ச (20), வரக்காபொல பி.ச (41), கலிகமுவ பி.ச (33), கேகாலை பி.ச (31), ரம்புக்கன பி.ச (35), மாவனல்லை பி.ச (40), அரநாயக்க பி.ச (30), யட்டியன் தொட்ட பி.ச (28), புலத்கொகுப்பிட்டிய பி.ச (18), ருவன்வெல்ல பி.ச (28), தெரனியகலை பி.ச (20), தெஹியோ விட்ட பி.ச (33) மொத்தம்-357.

**வேட்பு மனுப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது?**

அனைத்து அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் இரண்டு படிவங்களில் தமது வேட்புமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வட்டாரங்களுக்கான வேட்பு மனுக்கள்**

ஒருமை வட்டாரங்களினதும் மற்றும் பன்மை வட்டாரங்களினதும் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, உள்ளூராட்சி அதிகார சபைக்கு வட்டார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலான அபேட்சகர்களின் பெயர்கள் குறித்த வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(தொடரும்)



பங்களாதேஷிற்கு இரண்டுநாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.

பங்களாதேஷிற்கு இரு நாட்கள் விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நேற்றுக் காலை பங்களாதேஷின் டாக்காவிலுள்ள ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 50 ஆவது வருட நிறைவு 2022 ஆம் ஆண்டு முழுமையடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆலய வழிபாடு ஏன் – எதற்கு – எப்படி

## அர்த்தமுள்ள சமயச் சடங்குகள்

ஆலய வழிபாட்டின் ஒவ்வொரு விடயத்திலும் நம் முன்னோர்கள் நிறைய இரகசியங்களை உள்ளடக்கி வைத்துள்ளனர். அவற்றை அறிந்து கொண்டு கடவுளை வழிபாடு செய்தால் ஆத்மார்த்தமான பலன்களை நாம் அனுபவிக்க முடியும். பொதுவாக இறைவனை நெருங்க வேண்டுமானால் உண்மையான வழிபாடு, மனதை நெகிழச் செய்யும் பிரார்த்தனை, குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் பரிகாரம் ஆகிய மூன்றும் அவசியமாகும். யார் ஒருவர் தினமும் இறைவனை வழிபடுகிறாரோ அதுவும் பிரதிபலனை எதிர்பாராமல் வழிபாடு செய்கிறாரோ அவருக்கு முக்தி பாதை உடனே தெரியும்.

இத்தகைய வழிபாட்டுக்கு நம் முன்னோர்கள் வகுத்து வைத்துள்ள சமயச் சடங்குகள் உதவி செய்பவையாக உள்ளன. இறைவழிபாட்டின் போது தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், பூ, சந்தனம், குங்குமம் வைத்து வழிபாடு செய் வோம். இந்தச் சமயச் சடங்குகளின் பின்னால் தத்துவம் உள்ளது.

முதலில் ஆலயங்களில் தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்வது ஏன் என்பதைப் பார்க்கலாம். நம் அறிவை எப்போதும் ஆணவம் மறைத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆணவம் நீங்கினால் தான் அறிவு பிரகாசிக்கும். இதை நமக்கு உணர்த்துவது தேங்காய்.

தேங்காயைச் சுற்றியுள்ள ஒடு அறிவை சூழ்ந்துள்ள ஆணவத்தைக் காட்டுகிறது. அந்த தேங்காய் ஓட்டை இரண்டாக உடைத்து விட்டால் உள்ளே தேங்காயின் வெள்ளைப் பகுதியைக் காணலாம். அது கள்ளமற்ற நம் மனதைக் காட்டுகிறது.

தேங்காய் உடைக்கும்போது வெளியேறும் தண்ணீர் நம் மனதில் உள்ள பந்தபாசங்கள் விலகி ஓடுவதை உணர்த்துகிறது. ஆணவம், பந்தபாசங்கள் விலகி விட்டால் தேங்காய் வெள்ளைப் பகுதி போல நம் மனம் பிரகாசமாகி விடும். அது நம் அறிவை பளீர் என பிரகாசிக்கச் செய்யும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நம் மனதில் உள்ள ஆணவம் நீங்க வேண்டும் என்பதையே தேங்காய் உடைப்பு பிரதிபலிக்கிறது. தேங்காய்க்கு முக்கண் உண்டு. நாம் கடவுளை பிரார்த்தனையும் தியானமும் செய்து வழிபட்டால் மூன்றாவது கண்ணாகிய ஞானத்தைப் பெறலாம் என்பதை தேங்காயின் முக்கண் காட்டுகிறது. வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் வைத்து வழிபடுவது ஏன் தெரியுமா?

வெற்றிலையின் நுனியில் இலட்சுமியும் நடுவில் சரஸ்வதியும் காம்பில் பார்வதியும் இருப்பதாக ஐதிகம். எனவேதான் இறைவழிபாடு வெற்றிலை இல்லாமல் முழுமையடையாது என்பார்கள். வெற்றிலையை நாம் எப்போதும் வெற்றி தரும் இலையாகப் பார்க்க வேண்டும். மேலும் வெற்றிலையை உரிய முறையில் பூஜைக்குப் பயன்படுத்த வேண்டும்.

வெற்றிலையை நம் முன்னோர்கள் நமது உடலுடன் ஒப்பிட்டனர். இதை உணர்த்த பூஜைகளில் நம் முன்னோர்கள் வெற்றிலை வைப்பதை அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்தனர்.

ஸ்தூல உடல், சூட்சும உடல் ஆகிய இரண்டையும் குறிக்க பூஜைகளில் 2 வெற்றிலை வைப்பது வழக்கம். அது போல ஸ்தூல உடல், சூட்சும உடல், காரண உடல் மூன்றையும் குறிக்க 3 வெற்றிலை வைத்து வழிபட்டனர். நோயில்லாமல் நம் உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதே வெற்றிலை வைப்பதன் குறிக்கோளாகும்.

பாக்கு என்பது செல்வத்தைக் குறிக்கும். வாழைப்பழம் என்பது பிறப்பற்ற நிலையைக் குறிக்கும். பொதுவாக பழம் சாப்பிட்டு நாம் வீசி எறியும் விதையில் இருந்து புதிய செடி முளைக்கும். ஆனால் வாழைப்பழத்தை வீசி எறிந்தால் அது முளைப்பதில்லை. இது பிறப்பில்லாததை காட்டுகிறது. இறைவழிபாட்டின் முக்கிய நோக்கமே இன்னொரு பிறவி வேண்டாம் என்பதுதான். அதை இறைவனிடம் வேண்டவே மறுபிறவி இல்லாத வாழைப் பழத்தை பூஜையில் வைக்கிறோம். உலகம் முழுவதும் இறைவழிபாட்டில் வாழைப்பழம் முக்கிய இடம் பிடித்து இருப்ப தற்கு இதுவே காரணம் ஆகும். இரண்டு வாழைப்பழம் வைத்து வழிபடுவதை நாம் செய்யும் நல்வினை, தீவினை இரண்டையும் குறிக்கும். ஆக தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் ஆகிய நான்கையும் வைப்பதன் தத்துவத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## கதிர்காமம் பகுதியில் 29 கிலோ கஞ்சா மீட்பு

(கொழும்பு)

கதிர்காமம் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது 29 கிலோ 329 கிராம் கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே இவ்வாறு கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

## கைதிக்கு ஹெரோயின் கொண்டு சென்றவர் கைது

(கொழும்பு)

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் கைதியொருவருக்கு வழங்குவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட ஆடைக்குள் மறைத்து வைத்து ஹெரோயின் போதைப் பொருளை எடுத்துச் சென்ற சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (நி-4)

## தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை எட்டு இலட்சத்தைத் தாண்டியது

(கொழும்பு)

நாட்டில் கோவிஷீல்ட் தடுப்பூசியை 8 இலட்சத்திற்கும் அதிகமானோர் செலுத்திக்கொண்டுள்ளனர்.

அதன்படி ஜனவரி 29 ஆம் திகதி முதல் இதுவரையிலும் இலங்கையில் கொவிட் தொற்று தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 806,449 ஆக உயர்ந்துள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 160 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 240 | 160 | 200 |
| தக்காளி | 80 | 140 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 70 | 50 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 160 | 220 | 200 | 200 |
| பூசணி | 70 | 80 | 60 | 80 |
| புடோல் | 120 | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 300 | 250 | 240 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 200 |
| பயற்றங்காய் | 160 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 800 | 800 |
| போஞ்சி | 140 | 120 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 100 | 130 |
| கீரை – 1 பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 80 | 160 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 65 | 40-70 |
| இராசவள்ளி | 250 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 180 | 140 | 120 |
| முள்ளங்கி | 50 | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | 120 | 80 | 100 |

# வனவள திணைக்களத்திடமிருந்து 133 ஏக்கர் காணி விடுவிப்பு

(முறிகண்டி)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஜெயபுரம் பகுதியில் வனவளத்திணைக்களம் கையகப்படுத்தி வைத்திருந்த 133 ஏக்கர் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்ணேந்திரன் தலைமையில் ஜெயபுரம் வடக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு காணிக்கான அனுமதியை மக்களிடம் கையளித்தார்.



இந்நிகழ்வில் மாவட்ட காணி பதில் அரசாங்கதிபர், கிராம உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர்கள் மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (5-4-100-316)

# பல்வேறு பிரச்சினைகளுக்கு அமைச்சர்கள் கூட்டத்தில் தீர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைகள், விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள், போக்குவரத்து, சுற்றுலா மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அமைச்சரவைக் குழுக் கூட்டங்களில் முக்கிய தீர்வுகள் எட்டப்பட்டன.

கடந்த புதன்கிழமை கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடைபெற்ற வாழ்வதார அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் தொடர்ந்து நடைபெற்ற கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற உள்நாட்டு உற்பத்தி மற்றும் கைத்தொழில் மேம்பாட்டுக் குழுக் கூட்டத்திலுமே இந்த முடிவுகள் எட்டப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள காணிச் சர்ச்சைகளுக்கு உடனடியாக தீர்வுகள் எட்டப்பட்டதுடன், வடக்கு மாகாண காணிகள் இந்த மாகாணத்தின் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் அபிவிருத்துக்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீளச் செயற்படவிருக்கும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை குறித்தும் அதன் செயற்பாடுகளுக்கு அவசியமான உப்பு உற்பத்தியை மேம்படுத்துவது குறித்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்பட்டதுடன் இதுபோல் வடக்கில் செயலிழந்துபோயிருக்கும் பல்வேறு கைத்தொழில் முயற்சிகளையும் விரைவில் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (5-4)

# யுத்தம் நிறைவுற்ற காலம் முதல்

## வடக்கில் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளோம்

### யாழில் கெஹலிய

(நல்லூர்)

**யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் வட பகுதியில் மேற்கொண்டுள்ளோம் என அஞ்சல் சேவைகள், ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்**

வட்டுக்கோட்டையில் புதிய தபாலகக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 224 வருடங்கள்பழமை வாய்ந்த தபால் சேவை மக்களின் அவசியமான சேவையாகக் காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம்.

சுபீட்சத்தை நோக்கு என்ற எமது அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் வடபகுதியிலும் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் கிராம மட்டங்களிலும்



பிரதேச மட்டங்களிலும் இடம் பெற்று வருகின்றது.

யாழ்ப்பாண பிரதேசத்தை பொறுத்தவரை விவசாயம், கல்வி, உயர் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளே மிக முக்கியமான துறையாக காணப்படுகின்றது அத்துடன் அந்த துறைகளை அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

தபால் துறையை நவீனமயப்படுத்தி தபால் துறையுள் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி செயற்படுத்தல் தொடர்பில் . ஆராய்கிறோம். உலக நாடுகளில் உள்ள தபால் துறையை போன்று நமது நாட்டிலும் அதிநவீன வசதிகளைக் கொண்ட வகையில் எமது நாட்டின் தபால் துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.(5-4-18-30-33-101-104)

### இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி (கோண்டாவில்) நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள மேற்படி விடுதி மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

### கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தானத்தில் மஹா கணபதி ஹோமப்பெருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் வாழ்வை மேம்படுத்தவும் எதிர்காலத்தில் சுபீட்சமான வாழ்வுக்காகவும் நடைபெறும் இக் ஹோமம் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-4-8)

# சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள் கலந்துரையாடலில் வாக்குவாதம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நடத்த வந்த வேலணை வங்களாவடி வர்த்தகர்களை பிரதேச சபைத் தவிசாளர் சபை மண்டபத்திற்கு அழைத்து கலந்துரையாடியிருந்த நிலையில் அமைதியின்மை ஏற்பட்டது.

வேலணை பிரதேச சபை மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே கவனயீர்ப்பு போராட்டம் நடத்த வந்த வர்த்தகர்களை அழைத்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சபை அமர்வில் வர்த்தகர்களுக்கும் சபை உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்தவர்கள், குறித்த வங்களாவடி கடைத் தொகுதியில் தாம் வியாபாரம் செய்து வருவதாகவும் தற்போது உலக வங்கி நிதி அனுசரணையுடன் மாடிக் கட்டடம் கட்டுவதற்காக பிரதேச சபை தீர்மானம் எடுத்த நிலையில்,

குறித்த கடைத் தொகுதியில் 14 பேர் ஏற்கனவே கடைகள் நடத்தி வருவதுடன் தற்போது கட்டப்படும் கடைத் தொகுதி 7 பேருக்கு மட்டுமே வழங்கப்படும் என பிரதேச சபை தெரிவித்தது.

இதன் காரணமாக எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் பல காலமாக குறித்த பகுதியில் வியாபாரம் செய்து வரும் நமக்கு குறித்த பகுதியில் கடைகள் ஒதுக்கித் தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். குறித்த விடயம் தொடர்பில் வேலணை பிரதேச சபையின் தவிசாளர் கருத்து தெரிவிக்கையில்,

உலக வங்கியின் நிதி அனுசரணையில் கட்டப்படவிருக்கும் குறித்த கடைத் தொகுதியில் உரிமையாளர் அல்லாதவர்கள் வியாபாரம் செய்து வருவதாகவும் அது தொடர்பில் தாம் கலந்துரையாடி வருவதாகவும் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநரின் அபிப்பிராயங்களை கேட்டு கடைத் தொகுதி அமைப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-4-33)

உலகம் ஓர் உருண்டை. அதை உருட்டிவிட்ட பக்கம் அது உருளும். அதே சமயத்தில் அதற்கு இஷ்டப்பட்ட பக்கமும் அது சுழலும். ~ஸ்டாலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கைக்கு வருகைதந்த தேவலோகத் தூதுக்குழு - 2

*(யாழ்.மாவட்ட செயலகத்தைப் பார்வையிட்ட பின்னர் நல்லூர் முருகனைத் தரிசிப்பதற்காக தேவலோகத் தூதுக்குழு புஷ்பக விமானத்தில் புறப்பட்டது.)*

**பிரம்மா:** சித்திரகுப்தா! என்ன? அழுகுரல் கேட்கிறது. யாது நடந்ததோ.

**சித்திர:** சுவாமி 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் தம் பிள்ளைகளை, உறவுகளை இழந்த பெற்றோர்களும் பொதுமக்களும் தமிழ் மக்களுக்கு நீதி கேட்டுப் பேரணி நடத்துகின்றனர்.

**நாரதர்:** அப்படியா அந்தப் பேரணியை நாங்களும் சென்று பார்ப்போம்.

*(தாய்மார் வீதியில் விழுந்து அழுவதைப் பார்த்த தேவலோகத் தூதுக்குழு நெக்குருகி நிற்கிறது.*

**இந்திரன்:** யமதர்மா இந்த மக்களின் துன்பத்துக்கு இன்னமும் தீர்வு கிடைக்க வில்லையா?

**யமன்:** சுவாமி பௌத்த சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்க மறுக்கிறது. தவிர, வடபகுதியில் காணி அபகரிப்பு, பௌத்த விகாரைகளை அமைப்பது, தமிழர்களின் வரலாற்று ஆதாரங்களை அழிப்பதும் கையகப் படுத்துவதும் என மிகப் பெரும் நீரோசை நடக்கிறது.

**சித்திர:** அது மட்டுமல்ல சுவாமி! எங்கள் ஈஸ்வரன் சிவனின் ஆலயங்களில் தொல்லியல் திணைக்களம் அகழ்வாராய்ச்சி செய்கிறது. குருந்தூர்மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் பல்லவர் காலத்து தாரா லிங்கம் கிடைக்கப்பெற்றது.

ஆனால் அது பௌத்த விகாரைத் தூணின் அடிப்பாகம் என்று அவர்கள் கதைவிடுகின்றனர்.

**விஷ்ணு:** இந்திரா! இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஒரு பாடம் படிப்பித்தே ஆக வேண்டும்.

*இவ்வாறு விஷ்ணு பகவான் கூற நல்லூர் முருகன் ஆலய வளாகத்தில் புஷ்பகவிமானம் தரையிறங்கியது. முருகா... முருகா.. நல்லூர் பதி வாழும் முருகா! எனப் பாராயணம் செய்தபடி தேவர்கள் நல்லூர் முருகன் ஆலயத்துக்குள் சென்று வழி பாடாற்றுகின்றனர்.*

*வெளிவீதி வலம்வர வந்தபோது, சுவாமி! வெளிவீதி சுற்றிவர முடியாது என்றார் நாரதர்.*

**பிரம்மா:** ஏன்? அப்படி நாரதா!

**நாரதர்:** பல காரணங்களால் வெளிவீதி சுற்றி அடைக்கப்பட்டுள்ளது.

**பிரம்மா:** நாரதரே! நல்லூர் முருகனின் வெளி வீதியை சுற்றிவர உரிய ஏற்பாட்டைச் செய்யும்படி எங்கள் போற்றுதலுக்குரிய மாப்பாணர் ஜஷானுக்கு அறிவியுங்கள்.

**நாரதர்:** அப்படியே ஆகட்டும் சுவாமி.

**இந்திரன்:** அது சரி மானிடர்கள் எல்லோரும் முகக் கவசம் அணிந்திருக்கிறார்களே! எதற்காக?

**நாரதர்:** மூச்சுகாட்டக்கூடாது என்று யாரேனும் அதட்டியிருப்பார்கள்போல *(சிரிப்பொலி)*

**விஷ்ணு:** வாயை அடக்கு. பேசுவதை நிறுத்து. மௌனம் கலகநாஸ்தி என்பதால் மூக்கையும் வாயையும் மூடிக் கட்டியிருக்கிறார்கள்.

**யமன்:** சுவாமி கொரோனாக் கிருமி சீனாவில் இருந்து உலகெங்கும் பரவியுள்ளது. அதனால்தான் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு.

**விஷ்ணு:** அப்ப! உன் வேலையை சீன்வும் செய்கிறது என்று சொல்.

**பிரம்மா:** 'சி'னாவும் சீனாவும் நல்ல ஒட்டு.

**நாரதர்:** அப்படியா? இந்தியா என்ன செய்கிறது.

**பிரம்மா:** கும்பகர்ணன்போல் தூங்குகிறது.

*(நாளை தொடரும்)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நாவற்காடு, அச்சுவேலி, ஆவரங்கால், கலைமகள் சந்தி, புத்தூர், வாதரவத்தை, ஊறணி, வீரவாணி, பெரியபொக்கணை, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, வயாவிளான், திண்ணை Organic பண்ணை, தோப்பு, கைத்தொழிற் பேட்டை இல. II, கைத்தொழிற்பேட்டை இல. III, அச்சுவேலி, கைத்தொழில் - எண்ணெய் தொழிற்சாலை, சுதந்திரபுரம், புன்னாலைக்கட்டுவன், விக்கிரமரத்ன, அச்செழு, ஈவினை குட்டியப்புலம், நிலாவரை, சிறுப்பிட்டி நவக்கிரி, வில்லூன்றி, நாவாந்துறை, முத்தமிழ் வீதி, மீனாட்சிபுரம், பண்ணை சுற்றுவட்ட வீதி, கண்ணகிபுரம், பண்ணை சுகாதாரக் கிராமம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்சிறைச்சாலை, யாழ்.பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கிறிட்டிலிருந்து இரணைமடு சந்தி வரை, பாரதிபுரம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, DS Ware house, கிளிநொச்சி இராணுவ ஆதார வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்றட் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** நெடுங்குளத்திலிருந்து பொகஸ்வேவ வரை, CEC கல்லுடைக்கும் ஆலை, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** மன்னார் நகரத்திலிருந்து தலைமன்னார் வரை, கீரி ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ்தொழிற்சாலை, பூட் சிற்றி, மன்னார் வைத்தியசாலை, அரசாங்க அதிபர் அலுவலகம், இலங்கை போக்குவரத்து சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், தொலைத்தொடர்பு நிலையம், Palmyrah house கரைசல், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற் சாலை, தலைமன் னார் கடற்படைமுகாம், Palmyrah house தலைமைன்னார் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணம் தமிழ் மொழி மூலம் மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக் கல்வி ஆங்கிலப் பாடத்திற்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1(இ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட டிப்ளோமாதாரிகளை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கும் போட்டிப் பரீட்சை மற்றும்வடக்கு மாகாணகல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வு என்பவற்றில் தோற்றி தகைமை பெற்ற 97 பேர் ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமன கடிதங்களை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் (துந்தை செல்வா கலையரங்கில்) நடைபெறவுள்ளது.

எனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அன்றைய தினம் காலை 9 மணிக்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்துடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தெரிவு செய்யப்பட்ட டிப்ளோமாதாரிகள் ஆசிரிய பணிக்குரிய (பெண்கள் இளவர்ண சேலையுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் கால்சட்டை வெள்ளை நிற சேட்டும் அணிவதுடன் கழுத்துப் பட்டியும் அணிந்திருத்தல் வேண்டும்) சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நியமனத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட டிப்ளோமாதாரிகளின் பெயர் விபரங்களை வடமாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk என்னும் முகவரியில் பார்வையிட முடியும் எனவும் அறிவித்துள்ளார். (5-4)

## 'சினம்கொள்' திரைப்படம் நாளை வெளியாகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் மக்களின் வாழ்க்கை மற்றும் போராட்டம் சம்பந்தமாக சினம்கொள் திரைப்படம் யாழ். சர்வதேச திரைப்பட விழாவில் வெளியாக உள்ளது. நாளை 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள ரீகல் சினிமாவில் இத் திரைப்படத்தின் காட்சி இடம்பெறவுள்ளது.

2009இற்குப் பின்னர் தடுப்புச் சிறையில் இருந்து வெளியாகும் முன்னாள் போராளி ஒருவரின் நிகழ்கால வாழ்க்கை தொடர்பான இத் திரைப்படம் ஈழத்தின் இன்றைய நிலையையும் முன்னாள் போராளிகள் குறித்தும் பேசுகின்றது.

தென்னிந்திய திரைத்துறையினரின் பாராட்டைப் பெற்ற இத் திரைப்படம், புலம்பெயர் நாடுகளில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### கடைசி பருக்கையையும் கொடு

❖ இறைவனுக்கு பணி செய்ய விரும்புபவர் மக்களுக்கும், உலக உயிர்களுக்கும் பணி செய்ய வேண்டும். ஈசனுக்கு தொண்டு செய்பவரே உத்தமத் தொண்டராவர்.

❖ ஏழைகளிடமும், பலமற்றவர்களிடமும், நோயுற்றவர்களிடமும் இறைவனைக் காண்பவனே இறைவனை உண்மையாக வணங்குபவனாவான்.

❖ கோயிலில் இறைவனை வணங்குபவனிடம் அடையும் மகிழ்ச்சியை விட, ஏழைக்கு பணி செய்பவனிடம் இறைவன் அடையும் மகிழ்ச்சி மேலானதாகும்.

❖ புண்ணியத்தலங்களை தரிசித்தவனிடம் தன்னலம் இருந்தால், இறைவன் அவனிடம் மிகத்தொலைவிலேயே இருப்பான். தன்னலத்தை மறந்து பொதுநலத்துடன் வாழ வேண்டும்.

❖ மனத்தளர்வு வெற்றிகரமான வாழ்வுக்கு வழிவகுக்காது. உறுதியோடும், இனிமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதுவே மேலான நன்மையை பெறவைக்கும்.

❖ பிறருக்கு வழங்கவே கையை இறைவன் படைத்தான். பட்டினியாக கிடந்தாலும் கடைசிப் பருக்கையையும் பிறருக்குக் கொடு. பிறருக்கு வழங்குவதால் நீ முழுமையடைவதுடன், தெய்வமாகவும் மாறுவாய்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2021 - 13.04.2021

# இல்லத்தில் சுபகாரியங்கள் கைகூடும்






### தனுசு இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் நீச்சம் பெற்றிருக்கிறார். மேலும் அவர் ஆட்சி பலம்பெற்ற சனியோடு இணைந்து 'நீச்சபங்க இராஜயோகம்' அடைகின்றார். எனவே எதிர்பார்த்த காரியங்கள் வெற்றியாகும். இல்லத்தில் சுபகாரியங்கள் கைகூடும். தொழிலில் கூடுதல் இலாபம் உண்டு. தொல்லை தந்த எதிரிகள் விலகுவர்.

#### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு 4 ஆம் இடமான மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெறுகின்றார். 5, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும்பொழுது உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்புண்டு. தாயின் உடல்நலம் பற்றிய கவலை அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து எதிர் பார்த்த தகவல் வந்து சேரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும்.

#### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன இராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவது நன்மைதான். கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். கடமையில் இருந்த தொய்வு அகலும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் இணைவதால், பொருளாதார நிலை உயரும். 'புத ஆதித்ய யோகம்' இருப்பதால் கல்வி முன்னேற்றம் உண்டு. கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த குழப்பங்கள் தீர, முக்கியஸ்தர்களின் ஆலோசனை கைகொடுக்கும்.

#### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி குரு பகவான், கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். அவரது பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும். சுபச்செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். தொழில் இலாபம் தரும். தந்தை வழி ஆதரவால் சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். வாழ்க்கைத்துணைக்கு வேலை கிடைத்து, அதன் மூலமும் பொருளாதார நிலை உயரும்.

#### மேஷத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 10 ஆம் திகதி மேட இராசிக்கு புதன் செல்கின்றார். அதேபோல் ஏப்ரல் 11 ஆம் திகதி சுக்கிரனும் அங்கு வருகிறார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது, 'புத சுக்கிர யோகம்' உருவாகின்றது. இதனால் பூர்வ புண்ணியத்தின் பலன் கிடைக்கும். இதுவரை தடைப்பட்டு வந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும். வழக்குகள் சாதகமாக முடியும். பங்காளிப் பகை மாறும். உத்தியோகத்தைப் பொறுத்த வரை ஊதிய உயர்வும் இலாகா மாற்றமும் கிடைக்கலாம்.

#### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி, மிதுன இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். புத்திர ஸ்தானாதிபதி, சப்தம ஸ்தானத்திற்கு வரும் பொழுது பிள்ளைகளின் கல்வி, கல்யாண முயற்சி வெற்றியாகும். புதிய சொத்துக்கள் வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். வாகனம் வாங்க மற்றும் வீடுகட்ட விண்ணப்பித்திருந்தால் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு கவசம் பாடி குருபகவானை வழிபட்டு வருவது நல்லது.

#### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாகும். அடிக்கடி சிறுசிறு தொல்லைகள் வந்து நிவர்த்தியாகும். மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். ஏழரைச் சனி நடைபெறுகின்றது. எனவே எதிலும் கவனம் தேவை. கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம்கண்டு பெருமைப்படுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் உண்டு.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

# தேவையான நேரத்தில் உதவிகள் கிடைக்கும்






### மகர இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனிபகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு சகாய, விரய ஸ்தானத்திற்கு அதிபதியான குருவும் இருக்கின்றார். எனவே வருமானம் போதுமானதாக இருக்கும். தேவையான நேரத்தில் உதவிகள் கிடைக்கும். ஜென்மச் சனி நடக்கிறது என்றாலும், அது சனியின் சொந்த வீடு என்பதால் பயப்படத் தேவையில்லை.

#### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான மீன இராசியில் சுக்கிரன் உச்சம் பெறுகின்றார். இது ஒரு பொற்காலமாகும். உங்கள் இராசி அடிப்படையில் 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பலம்பெறும் இந்த நேரத்தில் தடைகள் அனைத்தும் விலகும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவீர்கள். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தது கிடைக்கும்.

#### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன இராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் நீச்சம்பெறும் இந்த நேரத்தில் நல்ல வாய்ப்புகளும் வரலாம். அதே நேரத்தில் நீச்சம் பெறும் புதன் 6 இற்கு அதிபதியாகவும் இருப்பதால் நீண்ட நாள் நோய்க்கு நிவாரணம் கிடைக்கும். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் வரலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரப்போகின்றது.

#### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி குரு பகவான், கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். அவரது பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே ஜீவன ஸ்தானம் புனிதமடைகின்றது. உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் பணி கிடைக்கும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவதால் வளர்ச்சி அதிகமாகும். வீண் விரோதங்கள் விலகும். 'வீடு மாற்றம் செய்யலாமா?' என்ற சிந்தனை மேலோங்கும்.

#### மேடத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 10 ஆம் திகதி, மேட இராசிக்கு புதன் செல்கின்றார். அதேபோல் ஏப்ரல் 11 ஆம் திகதி சுக்கிரனும் அங்கு வருகிறார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது, 'புத சுக்கிர யோகம்' உருவாகின்றது. எனவே இதுவரை இருந்த தடைக் கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். திடீர் வரவிற்கு இடமுண்டு. புதசுக்கிர யோகத்தின் விளைவாக நன்மை தரும் தகவல் இல்லம் தேடி வரும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

#### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி, மிதுன இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு செல்லும் செவ்வாய், ஆரோக்கியத் தொல்லைகளை உருவாக்கலாம். உடன்பிறப்புகளுக்கு ஏற்பாடு செய்த உத்தியோகம் கிடைத்து உதிரி வருமானங்களும் வரலாம். வழக்குகள் முடிவிற்கு வரும். கட்டப்பணியில் இருந்த தொய்வு அகலும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் தேடிவரலாம். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

#### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடப்பதால், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். ஆரோக்கியத் தொல்லை உண்டு. மருத்துவச் செலவும் ஏற்படும். மனக்குழப்பம் அதிகரிக்கும். 'இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா' என்று இரட்டித்த சிந்தனை மேலோங்கும். கணவன் - மனைவி விட்டுக் கொடுத்துச் சென்றால் பிரச்சினைகள் தீரும். பிள்ளைகள் வழியில் சுபச்செலவு உண்டு.

(தொடரும்)

## வயோதிபர்...

காரணமாக உயிரிழந்துள்ளார்.

மன்னார் புதிய பேருந்து தரிப்பிடத்தில் இருந்து இலங்கை அரச போக்குவரத்து சேவை பேருந்தில் நேற்றுக் காலை பயணம் செய்த வயோதிபரே இவ்வாறு உயிரிழுந்தவராவார்.

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவ சோதனைச்சாவடியில் குறித்த பேருந்து சோதனைக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்போதே குறித்த வயோதிபர் பேருந்தின் இருக்கையில் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ள நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக இவரது சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (ம-3,285)

## தமிழர்களின்...

இந்த மாநாடு நடைபெறும்.

Zoom Video Webinar தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

இந்த மாநாட்டில் தமிழ் மக்களின் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் அனைவரும் இந்த மாநாட்டில் கலந்து பயன் பெறுமாறு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினரும் வட மாகாண சபை முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பொது மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாநாட்டில் ஐ. நா மனித உரிமைகள் சபை முன்னாள் உயர்ஸ்தானிகரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதியரசருமான திருமதி நவநீதம்பிள்ளை, பிரித்தானியாவின் சர்வதேச மனித உரிமைகள் வழக்குரைஞரும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரின் பாரியாருமான செரிபிளயர் மற்றும் கனடாவின் சிறப்புமிக்கோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளவரும் 2010ஆம் ஆண்டு மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக நோபெல் பரிசுக்கு முன்மொழியப்பட்ட வருமான சர்வதேச மனித உரிமைகள் வழக்குரைஞர் டேவிட் மாடஸ் ஆகியோரும் இந்த மாநாட்டில் முதன்மை உரை ஆற்றுகின்றார்கள். (ம-3)

## யாழ்.பல்கலை...

வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவர்.

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் 15 வயதுடைய சிறுமி ஒருவர் (குடும்பத்தாருக்கு ஏற்கெனவே கொரோனாத் தொற்று) மானிப்பாயைச் சேர்ந்த தாயும் மகளும் என இருவர் ஆகியோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுபவர், நோய் அறிகுறியுடன் வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியில் மரக்கறி சந்தையில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பரிசோதனையில் வியாபாரி ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு நோய் அறிகுறியுடன் சென்ற பரந்தனைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## மனித உரிமை...

டில் மனித உரிமைகளை பாதுகாப்பதாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர்மேலும்கூறுகையில்,

இலங்கைக்கு சர்வதேச தொடர்புகள் அத்தியாவசியமானவையாகும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இனவாதம், மதவாதத்தின் அடிப்படையில் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றார். அதற்காக மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன.

இவ்வாறு செயற்படும் அரசாங்கம் ஜெனிவா இலங்கைக்கு எதிராக செயற்படுவதாக மக்களிடம் போலி பிரசாரங்களை முன்னெடுக்கிறது.

எனவே மனித உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை வெற்றி கொள்ள முடியும். ஜெனிவா நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு காணப்படும் ஒரேயொரு வழி மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகும். (ம-3)

## மரத்திலிருந்து...

ருந்து தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இருபாலை கிழக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மகேந்திரன் சிறிதரன் (வயது -40) என்பவரே உயிரிழுந்தவராவார்.

உயிரிழந்த குடும்பஸ்தர் மருதனார்மடம் விவசாய திணைக்களத்தில் வேலை செய்பவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## 4 பெண்கள்...

கள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 544 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## ஜெனிவாவில்...

ஆம் திகதி திங்கட்கிழமை வாக்கெடுப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் உற்று நோக்கப்படும் இந்தத் தீர்மான வரைவில் "பொறுப்புக்கூறலை முன்னேற்றும் நோக்கத்துடன், இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பான சான்றுகளைப் பாதுகாப்பது, பகுப்பாய்வு செய்வது என்பவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தகவல்களையும் சான்றுகளையும் திரட்டிப் பகுப்பாய்வு செய்து பாதுகாப்பதற்கும் அழைப்பு விடுக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## யாழுக்கு...

தப்புல டி லிவேரா யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு நேற்று வருகை தந்தார்.

அவரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் வரவேற்றார்.

மேல் நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுடன் அவர் கலந்துரையாடினார். (ம-3,33)

## மன்னார்...

வயதான ஆசிரியர் சியாமளா கோலி இலங்கை தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரையிலான 30 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாக்ஜலசந்தி கடலை நீந்தி கடந்து சாதனை புரிந்துள்ளார்.

கடந்த ஆண்டே பாக் ஜலசந்தி கடலை நீந்தி கடப்பதற்கு இந்திய- இலங்கை அரசுகளிடம் அனுமதி கிடைத்தது.

ஆனால கொரோனா பரவல் காரணத்தினால் முடியாமல்போனது. பாக் ஜலசந்தியை பெண்ணாக நான் நீந்தி கடந்ததன் மூலம் பெண்களால் அனைத்து சாதனைகளையும் உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு நம்பிக்கை அளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரையிலான கடலை நீந்தி கடந்த சியாமளா கோலி தெரிவித்தார்.

(ம-3,281,285)

# அரசியலமைப்பில் அதிகார பரவல் வேண்டும் கூட்டமைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஒரு புதிய அரசியலமைப்பானது இயன்றவரை அதிகூடிய அதிகாரப் பரவலாக்கத்திற்கு இட்டுச் செல்லும் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையிலானதாக அமைந்திருக்க வேண்டும் என கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாண ஆனைக்கோட்டை, நவாலி வீதி, மூத்த விநாயக கோவில் வீதி மெயின் றோட்டில் 06 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை
காணி பார்வையிடும் நேரம் : காலை 9 மாலை 6 மணி வரை
குரு 077 468 3354 077 288 0152

மெகா பவர்
திகதி 19/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0794
வெற்றி எழுத்து U சுப்பர் இலக்க 05 வெற்றி இலக்கங்கள் 08 50 52 62

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/03/19 சீட்டிழுப்பு இலக்கம் 1584
சுப்பர் இலக்கம் 12 வெற்றி இலக்கங்கள் 03 08 23 39
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2021/03/19
சீட்டிழுப்பு இலக்கம் 4431
ஆங்கில எழுத்து 0 வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 1 3 6 7 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 19.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2726
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 36 58 72 79
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.03.19
சீட்டிழுப்பு இலக்கம் - 468
A 27 42 57 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD தொலைபேசி : 011 460 7000 / 011 232 4374 உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1227
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 19.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 119,372,585
வெற்றி இலக்கங்கள் 19 32 36 54 ஆங்கில எழுத்து I
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3557
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 19.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,332,403
வெற்றி இலக்கங்கள் 29 33 42 54 ஆங்கில எழுத்து J
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 42,64,150/=
திகதி : 19.03.2021 வெற்றி வாரம் : 3108 வர்ணம் : கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 08 15 53 62 சிம்மம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,389,980

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1401 நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 19/03/2021 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 12 18 39 53
அடுத்த சுப்பர் ஜக்பொட 75,218,106/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜய சீட்டிழுப்பு வாரம் 704 வர்ணம் பச்சை திகதி 19.03.2021 வெள்ளிக்கிழமை
L 15 30 50 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,921,475
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கி வரும் ஒரு சிறிய உணவகத்திற்கு ரொட்டி வேலை தெரிந்தவர் தேவை. (6231)

**076 878 3734**

## சோ(F)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(F)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புகளை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6201)

**077 224 2787**

## வகுப்பு

கணிதம் தரம் 9,10,11 மாணவர்களுக்கு யாழ். நகரில் உள்ள வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (6179)

**076 645 8969**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1636)

**0768226240** DHL

## வேலையாள் தேவை

கிறைண்டிங் மில்லிற்கு வேலை பழகி வேலை செய்யவிருப்பமுள்ள பெண் வேலையாள் தேவை. வடமராட்சியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (ஈர அரிசி அரைத்து வறுத்தல்) (C-1755)

**077 936 1356** கோவிற் சந்தை.

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வேலையாள் தேவை

உடுவிலில் உள்ள கோழிப்பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய வேலையாள் (ஆண்) தேவை. **சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.** (C-1750)

**077 770 4771**

## அண்ணா

Express Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1637) 070 3305500 077 888 9388

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | | |
|---|---|---|---|
| சங்கானை | பளை | மல்லாவி | |
| ஆவரங்கால் | கிளிநொச்சி | மன்னார் | |
| நெல்லியடி | புதுக்குடியிருப்பு | வவுனியா | |
| சங்கத்தானை | முல்லை | கொழும்பு | |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## வேலையாட்கள் தேவையா?

உங்கள் நிறுவனங்களுக்கு தேவையான உத்தியோகத்தர்களை (Data Entry Operator, Clerk, Office Staffs, Cashier, Driver...) எம்மிடம் தெரிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். (6219)

**☎-074 138 3368**

www.dewmasweb.com

## VACANCY

Area Sales Manager (Sal. : 120, 000/=),
Sale Rep., Graphics Designer,
Data Entry Operator(Female),
Driver, Clerk(Shop-Female) (6219)

**☎-074 138 3368**

## AMC ACADAMY

23, Bmc Lane, Clock Tower Road, Jaffna.

A/L 2023 வர்த்தகப் பிரிவு 30 வருட அனுபவம் கொண்ட எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவே

ஆரம்பம் : 21.03.2021 ஞாயிறு காலை 9.00 மணி

**A/L 2021 ACCOUNTING**

Tamil & English Medium

துரித மீட்டல் வகுப்பு ஆரம்பம்

ஞாயிறு (21.03.2021) காலை 10.00 மணி (6235)

**By. A. KALAICHELVAN**

**077 694 4543**

## தேவை

யாழ். உயர்தர சைவ உணவகத்திற்கு தேர்ச்சி பெற்ற Chinese உணவு வகை தயாரிப்பாளர் தேவை.

நேரில் வரவும் (6226)

**☎-077 711 2269**

"அக்ஷதை" நாகவிகாரை முன்பாக, ஸ்ரான்லி றோட்.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக்குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (6234)

**U.S.A பாம்**

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

**077 868 9500**

## புத்தாண்டு விசேட தள்ளுபடி

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்...

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.



அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும். (C-1749)



மட்டுப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவர்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்**

**காலம் : 20.03.2021 – 13.04.2021 வரை**

## ஷண் பாடசாலை பேருந்து சேவை

நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை, குளப்பிட்டி ஊடாக யாழ். பாடசாலைகளுக்கு சேவையில் ஈடுபடும்.

எமக்கு பிள்ளைகள் தேவைப்படுகின்றனர்.

எமது சேவையானது

- சுமார் 20 வருடங்கள் அனுபவமிக்க சேவை.
- இருக்கைகளுக்கு அளவான சேவை.
- COVID-19 பாதுகாப்பு நடைமுறைக்கு உட்பட்ட சேவை.

(C-1752)

Note : எமது புதிய சேவையாக மானிப்பாய், உடுவில் பாடசாலைகளுக்கு உங்கள் ஆதரவுடன் ஆரம்பிக்க இருக்கின்றோம்.

**077 739 3078, 076 762 6106**

## சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம் – 2021

- காலம் - 04.04.2021
- நேரம் - 10.00 மணி
- இடம் - யாழ். மத்திய கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடினும் இதனை ஏற்று பொதுக்கூட்டத்திற்கு சமுகம் தரவும்.

குறிப்பு - அங்கத்தவர்கள் தமது முகவரியில் மாற்றம் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**திரு. ம.மயூரன்**
**077 253 4001**

பொதுச்செயலாளர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் (6233)

## தொழினுட்பப் பிரிவு

விஸ்டம்

**A/L 2023**
**2021 Day**

பொறியியற் தொழினுட்பவியல்
- K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)
- P.சண்முகதாசன் (Red Instructor Buildings - SLTES)
- R.சிவரூபன் NCECP, NCT (Electrical & Electronic)
- R.நிரூஜன் B.Sc
- M.சுதாகரன் NDT, B.Ed
- P.கிருபாகரன் NDT (Const Tech)
- P.கணேஸ் NDT Automobile, (Instructor Automobile)

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- P.விமலநாதன் B.Sc
- R.நிரூஜன் B.Sc
- A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE
- S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

(C-1753)

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- P.நிரோஜனன் B.Sc (Bio Technology)
- M.விஸ்ணுதேவன் B.Sc (Agri), PGDE
- P.S.ஷாணஸ் B.Sc (Agri)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்
- S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

விவசாய விஞ்ஞானம்
- P.S.ஷாணஸ் B.Sc (Agri)

புவியியல்
- S.ஸ்ரீகிருஸ்ணா BA (Hons), PGDE (Merit)

கணிதம் (7)
- S.தர்சன் B.Sc (Hons), PGDE (Merit)
- M.கோபிஸ்கண்ணா NDT (Maths)

ஊடகக் கற்கை
- S.கோணேசலிங்கம் Dip in Media

சித்திரம்
- S.கருணாகரன் NDT, B.Ed

077 248 7774
076 552 9093


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.